உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௬] கீலக ௵ சித்திரை ௴ [பகுதி-௬.

பகழிக்கூத்தர்.

இப்பெயருடைய புலவரொருவர் பிரசித்தராக இத்தமிழ்நாட்டில் வழங்கப்பட்டுவருதல் அறிஞர் பலரும் அறிந்தது. இவரது பிராபல்யத்தை அறிதற்குச் சிறந்தகருவியாக இதுவரை கொள்ளப்பட்டுவருவது இவராற் பாடப்பட்ட "திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்" என்னும் சிறுநூலேயாகும்.* இப்பிள்ளைத்தமிழின் பொருட்பொலிவும் நடைப்பொலிவும் புலவர்க்கெல்லாம் பேரானந்தந் தரத்தக்கன. இதனுட் பற்பலசந்தங்கள் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளன. இப்பகழிக்கூத்தர், வைணவ மரபினரென்றும், இடையே யுண்டான வயிற்றுநோயால் இவர் பெரிதும் வருந்தி, திருச்செந்தில் சென்று முருகக்கடவுள்பேரிற் இப்பிரபந்தம்பாடி அந்நோய் நீங்கப்பெற்றாரென்றும், அது முதல் சுப்பிரமண்யபத்தியில் ஒப்புயர்வற்று விளங்கினரென்றும் கர்ணபரம்பரையிற் கேட்கப்படுகின்றன. அன்றியும், இப்பிள்ளைத்தமிழினரங்கேற்றப்பெருமையைப்பற்றிய கதையொன்றும் வழங்குகிறது. இவர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழைப்பாடி அவ்வூர்முருகக்கடவுள் சந்நிதியில் அரங்கேற்றி முடித்தவுடன், சபையோர் அதன் வாக்குக்கு மகிழ்ந்தனராயினும், அவரிற்சிலர் "வைணவராயுள்ள இவர்க்கு நாம் மரியாதை செய்தல் கூடாது" என்று தடைசெய்ய, பகழிக்கூத்தர் அம்மரியா

* இந்நூல், இச்சங்கத்து நூற்பரிசோதகர் ஸ்ரீ: மு. ரா. அருணாசலக் கவிராயரவர்களால் விகாரிவருஷத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இஃதன்றி வேறு பதிப்புக்களும் உளவென்று தெரிகின்றது.

*

தைகளைப் பொருட்படுத்தாது தம்நூல் சந்நிதியிலே அரங்கேற்றப் பட்டு முடிந்ததற்கு உவந்து, தம்மிருப்பிடஞ் சென்றனர். அன்றிரவு, முருகக்கடவுட்கு விசேட அலங்காரமாகச் சாத்தப்பட்டிருந்த விலையுயர்ந்த அரதனப்பதக்கம் காணுமற்போனதைத் திருவனந்தல் சமயத்திற்கண்ட கோயிலார், அதனை ஊரெங்குந் தேடிவரும்போது, அதிகாலையில் நித்திரைசெய்துகொண்டிருந்த பகழிக்கூத்தர் கண்டத்தில் அஃதணியப்பட்டிருத்தல் கண்டு, "நம்பெருமானே இப்புலவர் பத்தியை வெளிப்படுத்தச்செய்தருளிய திருவிளையாடலிது" என்று முன்னைநாள்வரலாற்றால் தெரிந்து, அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு, பகழிக்கூத்தரைப் பல்லக்கில் வைத்து ஊர்வலஞ்செய்து, மற்றும்வேண்டிய மரியாதைகளைப் புரிந்தனுப்பினர்கள். அன்று முதல் இப்பிள்ளைத்தமிழ் தெய்வத்தன்மையுள்ள தென்று திருப்புகழோடு சேர்த்து, சந்நிதியில் ஓதிவரும்படி செய்யப்பட்டதென்பர். இவர் வைணவரென்பதனை, அந்நூற் சிறப்புப்பாயிரமாகக் கண்ட,

> " செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
> கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தா—னந்தேர்
> திருமாது சேர்மார்பன் றேர்ப்பாகற் கன்பு
> தருமால் பகழிக்கூத் தன்.'

என்னும் வெண்பாவாலும் உணரப்படும். இனி, மன்னார்குடி மிஷன் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும், என்னண்பருமாகிய ஸ்ரீ: சர்க்கரை—இராமசாமிப்புலவரவர்களால், சமீபத்தில் இச்சங்கத்துக் களிக்கப்பட்ட ஏடுகளிலே "சீவகசிந்தாமணிச் சுருக்கம்" என்றொரு நூலும் உள்ளது. இதன் முகப்பில் எழுதப்பட்டுள்ள குறிப்பில், "செம்பிநாட்டுச் சன்னசிக்கிராமத்துத் திருப்புல்லாணி மாலடியான் - தர்ப்பாதனன் மகன் பகழிக்கூத்தன் வாக்கு" என எழுதப்பட்டுள்ளது. இனி இந்நூலினுள்ளே, முதற்கண் விநாயகசுப்பிரமணியஸ்துதிகள் கூறப்பட்டிருத்தலோடு, சிலவிலம்பகங்களின் தொடக்கத்தே முருகக்கடவுள்தோத்திரங்கள் தனித்தும் வருகின்றன. இதனால், ஸ்ரீ சுப்பிரமணிய பத்தியிற் சிறந்து விளங்கிய அப்பகழிக்கூத்தரே இச்சிந்தாமணிச் சுருக்கமும் பாடினவராதல் வேண்டுமென்று கருதத்தடையில்லை. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்பாடிய இப்புலவர் வை

ணவரென வழங்கும் வரலாற்றோடு, மேற்கண்ட குறிப்பில், இவர் தந்தைக்கு "மாலடியான்" என்னும் அடை கூறப்படுதலுங் காண்க. இவற்றால், இவர் செம்பிநாட்டுச் சன்னுசிக் கிராமத்தவரென்பதும், இவர் தந்தையார் திருப்புல்லாணி மாலடியான்—தர்ப்பாதனர் என்பதும் தெளிவாகும். செம்பிநாடாவது, சேதுபதிகள் ஆட்சிக்குட்பட்ட நாடு முழுமையுமாம். ஒருதுறைக்கோவையில், அமிர்த கவிராயர், சேதுபதியைச் "செம்பிநாடன், (௬0, அ௨,) செம்பியர்கோன் (௨0௩) செம்பிநாட்டிறை (௨0௭,) செம்பியர் தோன்றல் (௨௧அ) என வழங்குதலுங் காண்க. சன்னுசிக் கிராமமென்பது, சேதுசம்ஸ்தானம் காமங்கோட்டைச் சேகரத்தைச் சார்ந்தது. இன்றும் அஃது அப்பெயரானே வழங்கப்படுகிறது. இப்போது கவர்ண்மெண்டு கிராமமாக மாறியுள்ளது. இதனைச் "சதுர்வேதமங்கலம்" எனவும் கூறுவர். இவர் தந்தையார் இயற்பெயராகிய தர்ப்பாதனன் என்பது, திருப்புல்லாணியில் தருப்பசயனத்தே கண்வளர்ந்தருளும் இராமபிரான் திருநாமமாம். இனி, சிந்தாமணிச் சுருக்கத்தின் தொடக்கத்தே ஆசிரியர் வாக்காகவுள்ள பாயிரச் செய்யுளொன்று மேற்குறித்த வரலாற்றோடு ஒத்திருக்கிறது. அது வருமாறு:—

"மாரனு மெனவடிவு கொண்டசீ வகசரிதை யாமுனி யுரைத்த சிந்தாமணியிற் பெருங்கதை யெவர்க்குமள விடவொணு மற்றது தனைச்சு ருக்கிச், சோநா னென்னுடைய புன்சொற்க ளாயினுஞ் செப்புவ னெனவிரும்பிச்-செந்தமிழ்ப் பாவாணர் திருவுளக் கருணையென் சென்னியுற வைத்து ரைத்தேன், ஆரநாண் மலர்நெட் டிதழ்க்குவளை யகவயலி லகடுநொந் தொருகோடிசங்-கடைகிடக் கக்குருகு பெடையெனச் சிறகா லணைத்திடுஞ் செம்பிநாட்டு,வீரநாராயணச் சதுர்வேத மங்கலம் விளங்கவே வந்த நெடுமால், வேதியர்குலாதிபதி தர்ப்பா தனன்புதல்வன் மிக்கபக ழிக்கூத்தனே.

இப்பாட்டால், சன்னுசிக்கிராமம் வீரநாராயணச் சதுர்வேத மங்கலம் என அழைக்கப்பட்டு வந்ததென்பதும் "நெடுமால் வேதியர் குலாதிபதி" என்பதனால் இவர் வைஷ்ணவபிராமண குலத்தின ரென்பதும் விளங்குகின்றன. அறியாதார் சிலர், இவர் மரபைப்பற்றி வேறுவிதமாகக் கூறுவதெல்லாம், இவ்வரலாற்றாற் பொய்மைப்படுதல் காண்க. இனி, அவையடக்கத்தில்,

"கொல்லேயி லிரும்புனக் குற்றியை யடைந்தபுற் கோடா * தெனப்ப ழைமை நூல்—கூறுந் திறத்தைக் குறித்துக் கருத்துடன் கூறினே னென்னு டையபுன், சொல்லேயும் பொருளேயுங் காதையிற் படுவழுத் தொகையையு மளந்து கண்டு—சோர்வுரைக் கப்பெரும் பாரமோ பணேமுலேத் துடியிடைப் பவள வாய்வெண், முல்லேநகை யங்கயற் கண்ணுமை மடந்தையுடன் முன்னே முளேக்கும் பிரான—முடிசூடு மெம்பிரான் மூவாத தம்பிரான் முத்தமிழ்த் திருவாலவாய், எல்லேதனின் மதுரைமா நகரியி லிருந்திவை யெடுத்துரைத் தேனுதலால்—இத்தலவி சேடத்தை யெண்ணியும் பெரியோர்க ளிகழப்ப டார்காணுமே"

என்றெருரு விருத்தம் வருகின்றது. இதனுல், இந்நூலே மதுரையிலிருந்து பகழிக்கூத்தர் பாடினரென அறியப்படுகிறது.

இவ்வேடு இலக்கணேயாரிலம்பகம் முடியவுள்ளது; அதுதானும், பதுமையாரிலம்பகம் வரையுமே சிதைவின்றிக் காணப்படுகின்றது: ஏனேயவை செல்லரித்தும் ஒடிந்தும் போயின. இதன்பாடல்களின் மொத்தத்தொகை இவ்வளவென்று இப்போது கூற முடியவில்லே: ஆயினும்.

க.	நாமகளிலம்பகம்	...	ரு அ	சு.	கேமசரியார்	...	கக
உ.	கோவிந்தையார்	...	அ	எ.	கனகமாலேயார்	....	ருகூ
ங.	காந்தருவதத்தையார்		ச0	அ.	விமலேயார்	...	க0
ச.	குணமாலேயார்	...	ரு உ	கூ.	சுரமஞ்சரியார்	...	,,
ரு.	பதுமையார்	...	ரு 0	க0.	இலக்கணேயார்	...	சு0

என்று ஒருவாறு கணக்கிடப்பட்டது. இதன்கண்வரும் விருத்தமெல்லாம், பதினுன்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தங்களேயாம். "கற்றபுலவோர்முதல் வகுத்தசீரேழ் கலந்துபத முறையி லெண்ணி" என இவரே கூறுதலுங் காண்க. பழைய கடினமான வாக்கிலமைந்த சீவகசரிதையை, இவர் இனிமையும் எளிமையும் அருமையுமான வாக்கால் விளக்கிச்செல்லும் மாட்சி புகழத்தக்கதாம். இம்முறை இடமின்மையால், வரும்பகுதியொன்றில், மாதிரிகைக்காக ஓரிலம்பகத்தை வெளியிட்டுத் தமிழறிஞரை மகிழ்விக்க முயல்வேன்.

---

* "கொல்லே யிரும்புனத்துக் குற்றி யடைந்தபு, லொல்காவேயாகு முழவ ருழுபடைக்கு, மெல்லியரே யாயினும் நற்சார்வு சார்ந்தார்மேற், செல்லாவாஞ் செற்றூர் சினம்" என்பது **நாலடியார்.**

இந்நூல், திருத்தக்கதேவரது சொற்பொருட் கருத்துகளைப் பெரிதும் தழுவி அந்தாதித் தொடராக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வேடு அரைகுறையாக விருத்தலால், எங்கேனும் முழுதுங்கிடைத்து வெளியிடப்படுமாயின், பகழிக்கூத்தர் பெருமை விளங்குதலேயன்றி, மாணாக்கரும் பிறரும்படித்து மகிழ்தற்கு உதவியுமாம். மகாமகோபாத்தியாயர் ப்ரம்ம ஸ்ரீ-சாமிநாதையரவர்கள், சமீபத்தில் வெளியிட்ட சிந்தாமணிப் பதிப்பின் முகவுரையில் "சிந்தாமணிமாலை என்று ஒரு நூல் வழங்குகின்றது; அது சுத்தத் தமிழ் நடையுள்ளதன்று" என்று எழுதியுள்ளார்கள். இதனால், பழையபெரியபுலவரது சிறந்த வாக்காகிய இச்சிந்தாமணிச் சுருக்கத்தைத் தவிர சீவகசரிதை சம்பந்தமான வேறொரு நூலும் உண்டென்று தெரிகிறது. "அகவல் விருத்தத் திறத்தால், உற்ற சிந்தாமணி விளக்கமென நாணுமலுரை செயுங்கதை" எனப் பகழிக்கூத்தரே கூறுதலின், "சிந்தாமணி விளக்கம்" என்பதே இந்நூற்கு ஆசிரியரிட்டபெயரென்பது விளங்கும். பகழிக்கூத்தர் காலம் இன்னதென்று இப்போது துணியக் கூடவில்லை. ஏனைய சரிதங்களுளவேல் வல்லார்வாய்க்கேட்டுணர்க.

பத்திராசிரியர்.

நல்லொழுக்கம்.

[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு]

(முற்றொடர்ச்சி.)

நல்லவரான ஸர் தாமஸ் மூர் (Sir Thomas More) உடைய நடத்தையானது, குறைந்த தைரியமுள்ளதன்று. அவர் தன் மனச்சான்றினுக்கு மாறாயிருப்பதினும் தூக்குமரத்தினுக்கு மனதுடன் சென்று மகிழ்வுடன் அதிற் பிராணனை மாய்த்தனர்.

மூர் (More) என்பவர் தம் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நிற்கக் கடைசியில் தீர்மானித்தபொழுது, தனக்கு ஒரு வெற்றி கிடைத்தாற் போல உணர்ந்து, தன், மருகனாகிய ரோப்பர் (Roper)

ஐநோக்கி, "ஸன் ரோப்பர் ஏ! போர்க்களத்தில் வெற்றிபெற் றதற்காக நம் கடவுளை வந்திக்கிறேன்" என்றனர். நார்பால்க் (Norfolk) ன் டியூக் (Duke) ஆகிய பிரபுவானவர் "மாஸ்டர் மூர் (Master More) ஏ! இராஜகுமாரர்களுடன் போராடுவது, அபாய கரமானது. ஓர் அரசகுமாரனுடைய கோபமானது மரணத்தை விளைவிக்குமென்பது சத்தியம்'' என்று சொல்லி அவருடைய அபா யத்தைப்பற்றி அவருக்குச்சொன்னார். அதற்கு மூர் (More) என் பவர் சொன்னதாவது, "என் பிரபுவே இவ்வளவுதான், அப்படியா னால், உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசமாவது; நான் இன்று சாவேன் நீர் நாளையதினம் சாவீர்."

கஷ்டமும் அபாயமும் நேரிட்டகாலத்தில் தங்கள் மனைவிகளால் உற்சாகப்படுத்தப்பட்டு ஆதரிக்கப்படுவது, அநேக பெரியமனிதர்க ளுக்கு பாக்கியமாயிருக்க, மூர் (More) என்பவருக்கு அத்தகைய ஆறுதலில்லை. அவர் டௌவர் (Tower) சிறைச்சாலையிலிருக்கையில் அவருடைய மனைவி அவருக்குச் சமாதானம் உண்டாக்க எத்தனை யோ செய்தனள். அரசன் அவரிடம் கேட்டுக்கொண்டதை மட்டும் அவர் செய்வதால், உடனே அவர் தன் சுவாதீனத்தையும் பெற்று செல்ஸீ (Chelsea) யிலுள்ள தன் நேர்த்தியான வீட்டையும், தன் புத்தகசாலையையும், பழத்தோட்டத்தையும், சித்திரகூடத்தையும் தன் பெண்சாதி பிள்ளைகளுடன் வாழ்தலையும், ஏய்தக்கூடிய நிலை மையிருக்க அதற்குடன்படாது அச்சிறையில் அவர் தங்கியிருத்தற் குப் போதுமான முகாந்தரம் உண்டென்பதை அவள் நினைக்கக்கூ டாதவளாயினள். ஓர்நாள் அவள் அவரிடம் சொன்னதாவது, "பி ஷப்புகள் (குருக்கள்மார்) செய்திருக்கும் வண்ணம் நீரும் செய்வீரே ல் உம்முடைய சுவாதீனப்படி சஞ்சரிக்கலாகும், அதனைவிட்டு இது வரை புத்திசாலியென்று பெயர் எடுத்த நீவிர் இப்பொழுது இந்த ஆபாசமான மூடுசிறையிற் கிடக்கும்படியான மூடத்தன்மையைப் பொருந்தி, மூஞ்சூறு எலிகளுக்குள் அடைபட்டுக்கிடப்பதில் திருப் தியடைந்திருப்பதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்" என்பதாம். ஆனால் மூர் என்பவர் தமதுகடமையை அவளுடைய கொள்கைக்கு மாறான நிலைமையில்வைத்து உணர்ந்தனர். தன் சௌந்தச்சுகத்தை நாடுவது அவருடைய கருத்தன்று. அவருடைய மனைவியின் ஆக்ஷே

பணிகள் பயனிலவாயின. "இந்த இருப்பிடம் என் சொந்த இடத்தைப்போல ஏறக்குறைய சொர்க்கத்திற்குச் சமானமல்லவா?" என்று அவர் களிப்புடன்சொல்லி அவளை மிருதுவாய் ஆக்ஷேபித்தனர். அதற்கு அவள் ("Tilly Vally; tilly vally") சிச்சி என்று இகழ்ந்து விடையளித்தனள்.

ஆனால் மூர் (More) உடைய குமாரத்தி மார்ஜரட் ரோப்பர் (Margerat Rcper) என்பவர் தன் தகப்பனாரை அவருடைய கொள்கையில் அசையாமல் நிற்கும்படி தைரியப்படுத்தி அவருடைய சிறையில் அவரைக் கடமையுடன் ஆறுதல்செய்து சந்தோஷப்படுத்தினள். அவருக்கு இறகும் மையும் கொடுபடாமையால் ஒரு நிலக்கரித்துண்டைக்கொண்டு அவளுக்கு எழுதிய கடிதங்கள் ஒன்றில், குமாரத்திக்குரிய அன்புள்ள உன் கடிதங்கள் எவ்வளவு சந்தோஷத்தை எனக்கு அளித்தனவென்று எழுதவேணுமானால் நிலக்கரியின் நுனியானது எழுதுகருவியாகப் போதுமான அளவு அமையமாட்டுவதில்லை" என்று சொன்னார். மூர் (More) என்பவர் உண்மைக்காக உயிர் கொடுத்தவர். பொய்ப்பிரமாணம் செய்யமாட்டேனென்றனர். அவர் உண்மையாயிருந்ததால் இறந்தனர். அவருடைய தலையைக்கொய்தபொழுது அக்காலங்களின் மூடவழக்கத்தின்படி லண்டன் (London) பாலத்தின்மீது அது வைக்கப்பட்டது. மார்ஜரட் ரோப்பர் (Margaret Roper) என்பவள் அந்தத்தலையை எடுத்துத் தன்னிடம் கொடுக்கும்படி தைரியமாய்க் கேட்டனள். தன் தகப்பன் இறந்தபின்னரும் தன்னன்பை நீடிக்கச்செய்து, அவள் இறந்தபொழுது தன்னுடன் அதைப் புதைப்பதற்கு விரும்பினாள். வெகு காலத்திற்குப்பின்னர் மார்ஜரட் ரோப்பர் (Margaret Roper) உடைய கல்லறை திறக்கப்பட்டபொழுது அவளுடைய மார்பின்பாகமான புழுதியில் அந்த மதிப்புள்ள அங்கங்கிடக்கக் காணப்பட்டது.

மார்ட்டின் லூதர் (Martin Luther) அவருடைய மதக்கொள்கைக்காக உயிரைக்கொடுக்கும்படி அழைக்கப்படவில்லை. ஆனால் போப்புகளுக்கு விரோதமாய்த் தன்னை வெளிப்படுத்தின நாள்முதல் உயிரை இழக்கும்படியான அபாயத்தில் இருந்தார். தன் பெரிய விவாதாரம்பத்தில் ஏறக்குறைய முற்றிலும் தனிமையாகவே நின்ற

னர். பயங்கரமான விபரீதங்கள் அவருக்கு உண்டாயின. ஒருபக்கத்தில் வித்வான்கள், மேதாவிகள், அதிகக்கூட்டத்தார், மகிமைபெற்றவர்கள், அந்தஸ்துள்ளவர்கள், அதிகாரிகள், குருக்கள்மார் அற்புதங்களுடன் இருக்கின்றனர். மற்றொரு பட்சத்திலோ வைக்ளிப் (Wycliffe) லோரன்ஸோ (Lorenzo) வேல்லா (Valla) ஆகஸ்டைன் (Augustine) ஆகியசில இஷ்டர்களுடன் அதாவது ஏறக்குறைய தனிமையென்னும்படியாக நேற்றுப்பிறந்த எளிமையான ஜெந்துவாகிய லூதர் (Luther) இருக்கிறனென்று தனக்குத்தானே லூதர் (Luther) சொல்லிக்கொண்டனர். மதவிரோதமென்னும் குற்றம் அவர்மீது ஏற்பட்டதற்கு உத்தரம் கொடுக்குமாறு வோம்ஸ் (Worms) க்கு வரும்படி சக்கரவர்த்தியால் ஆஞ்ஞாபிக்கப்பட்டபொழுது, அவர் தாம் நேரில் மறுமொழிகொடுக்க நிச்சயித்தனர். அவர்போனால் உயிரிழக்க நேரிடுமென்றுசொல்லி அவரை ஓடிப்போய்விடும்படிக்கு அவரைச் சுற்றியிருந்தவர்கள் விசேஷமாய்க் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர் "கூடாது, வீட்டின் கூரைகளிலுள்ள ஓடுகளுக்கு மும்மடங்கு பிசாசுகள் அங்கேயிருந்தாலும் நான் அங்கே போவேன்" என்று சொன்னர். டியூக் ஜார்ஜ் (Duke George) எனும் பிரபுவின் கொடூரமான பகையைப்பற்றி யெச்சரித்தபொழுது "ஒன்பது நாள் முழுமையும் டியூக் ஜார்ஜ (Duke George) ரூபமாக மழைபெய்து நிறைவுற்றிருந்தபோதிலும் நான், அங்கே போவேன்" என்று அவர் சொன்னர்.

லூதர் (Lnther) தாம் சொல்லிய வண்ணமே அந்த அபாயகரமான பிரயாணத்தைத் தொடங்கினர். வோர்ம்ஸ் (Worms) இன் பழைய மணிக்கோபுரத்தின் முன்னர் அவர் வந்தபொழுது அவர் தன் வண்டியில் நின்றுகொண்டே இரண்டுநாளைக்கு முன்புதான், தான் இயற்றிய இசைபூண்ட வாக்கியங்களாகிய கீதத்தைப்பாடினர் ஆலோசனைச்சங்கத்தாரை அடைவதற்கு முன்னர், ஜியார்ஜ் பிரியண்டெஸ்பர்க் (George Freundesberg) என்னும் ஓர் பழைமையான படைவீரன் லூதர் (Luther) உடைய தோளில் தன்கையைவைத்து "நல்ல சந்நியாசியே, நீர் செய்வதைப்பற்றி எச்சரிக்கையாயிரும். எங்களில் யாராவது இதுவரை செய்திருப்பதைவிட மிகவும் கடினமான போர்புரியப்போகின்றீர்" என்று அவருக்குச் சொன்னன்.

ஆனால் அந்த அனுபோகசாலியான படைவீரனுக்கு லூதர் (Luther) என்பவர், பைபில் (Bible) என்னும் வேதபுஸ்தகமும், தம்முடைய மனச்சாக்ஷியுமே தமக்கு ஆதாரமாகத் தீர்மானித்திருந்ததாக ஒரே விடையளித்தனர்.

ஆலோசனை சபையார் முன்பு லூதர் (Luther) சொன்ன தைரியமான மறுமொழியானது எழுத்தில் இருக்கிறது; சரித்திரபுத்தகத்தில் மிகவும் மகிமைபெற்ற சங்கதியாக விளங்குகிறது. கடைசியாகச் சக்கரவர்த்தியானவர் அவருடைய கொள்கையை மாற்றும்படி அவரை விரும்பிக்கேட்டபொழுது அவர் உறுதியாய்ச்சொன்னதாவது: ஐய, வேதபுஸ்தகத்தின் சாக்ஷியத்தாலாவது அல்லது வேறு பகிரங்கமான சாக்ஷியத்தாலாவது என் தப்பிதத்தை நான் உணர்ந்துகொண்டாலன்றி என்னுடைய கொள்கையைமாற்ற முடியாது. மாற்றவும் மாட்டேன், ஏனென்றால் நாம் நம் மனச்சாக்ஷிக்கு மாறாக நடத்தல் கூடாது. நான்கொண்ட கொள்கை அப்படி இருக்கிறது. நீர் என்னிடம் வேறுவிதம் எதிர்பார்க்கப்படாது. இதோ நிற்கிறேன், நான் வேறுவிதமாகச் செய்யமுடியாது, கடவுள் எனக்கு உதவிபுரிவாராகுக." அவர் அவருடைய கடமையைச் செலுத்தவேண்டியிருந்தது. அதாவது அரசர்களுடைய வல்லமைக்கு மேற்பட்டதாகிய வல்லமையையுடைய கடவுளுக்குக் கீழ்ப்படியவேண்டியிருந்தது. சகல அபாயங்களிலும் அதனை நிறைவேற்றினர்.

அப்பால் ஆக்ஸ்பர்க் (Augsburg)ல் அவருடைய சத்துருக்கள் அவரை அதிகமாய் நிர்ப்பந்தித்தபொழுது, நம்பிக்கை விஷயமாய்த் தாம் எழுதிய உபந்நியாசத்தை மாற்றுவதைவிடத் தமக்கு அஞ்ஞூறு தலைகளிருந்தால் அவ்வளவையும் இழந்துவிடுவதாக லூதர் (Luther) சொன்னார். தைரியமுள்ள எல்லா மனிதரையும்போலவே அவருக்கு நேர்ந்து நடக்கவேண்டிய கஷ்டங்கள் அதிகரிப்பதற்குத்தக்கதாக அவருடைய பலம் வளர்வதாகத்தோற்றின. "லூதர் (Luther) ஐ விட அதிகமாய் மரணத்தை முற்றும் அலட்சியம் செய்பவர் ஜெர்மனி (Germany) தேசத்தில் வேறொருவருமிலர்." என்று ஹட்டன் (Hutten) என்பவர் சொன்னார். தற்கால யோசனையைத் தாராளமாய்ச் சொல்லவும் மனிதனுடைய அறிவினுக்குள்ள

*

விசேஷ பாத்தியதைகளை நியாயமுகமாய் ஆதரிக்கவும் மற்றெந்தத் தனித்த மனிதனுடையதையும் விட லூதர் (Luther) உடைய சன் மார்க்க தைரியத்திற்கு நாம் கடன்படுகிறோம்.

கண்யமும் தைரியமுமுள்ள மனிதன் அபகீர்த்தியைப்பார்க்கி லும், மரணத்திற்கு அதிகமாய்ப் பயப்படுகிறதில்லை. ஸ்ட்ரே போர்ட் (Strafford)இன் ராயலிஸ்ட் எர்ல் (Royalist Earl) என் னும் பிரபுவானவர், டௌவர் ஹில் (Tower Hill) இல் உள்ள தூக் குமரத்திற்குப் போனபொழுது அவருடைய நடையும் போக்கும், மரண தண்டனையினிமித்தம் செல்லுகிற கொலைச்சிறையாளியின் தன்மையவாயிருப்பதினும், வெற்றிபெறுவதற்கு ஓர் சேனைக்குத்த லைமையாகச்செல்லும் சேனாதிபதியின் நடையின் இலட்சணங்களாக இருந்தன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறே அதே ஸ்த லத்திலேயே காமன் வெல்த் (Common wealth) பக்கத்தாராகிய ஹென்ரி வேன் (Henry-Vane) என்பவர் "இந்த உலகமெல்லாவற் றையும்விட அதிகமாய் நான் மதிக்கிற கற்பையும் தூய்மையையும், மனச்சாக்ஷியையும் அசுத்தப்படுத்துவதைப்பார்க்கிலும், பதினுயி ரம் சாவுசாகலாம்" என்று சொல்லிக்கொண்டு தைரியமாக மரணத் திற்குச்சென்றனர். வேன் (Vane) உடைய மிகுந்த கஷ்டமானது தன் மனைவியினிமித்தமேயாம். அவளைத் தனக்குப்பின்னர் விட்டுப் போகவேண்டியிருந்தது. அவள் டௌவர் (Tower)இன் ஜன்னலி லிருந்து தன்னைக்கீழே பார்ப்பதைக்கண்டபொழுது, அவர் வண்டி யில் எழுந்து நின்றுகொண்டு தன் தொப்பியை அசைத்து, "என் அ ன்புடையாளே! சொர்க்கத்திற்குச சொர்க்கத்திற்குப்போகிறேன். ஆ னால் உன்னைச் சூறுவளிக்காற்றில் விட்டுவிடுகிறேன்" என்று உரக்க ச்சொன்னர். அவர் வழியே செல்லும்பொழுது அக்கூட்டத்தில் ஒருவன் "அதுதான் நீ எப்பொழுதாவது உட்கார்ந்த மகிமையுற்ற ஸ்தானம்" என்று உரக்கச்சொன்னன். அதற்கு அவர் "உள்ளபடி அப்படியேதான்" என்று மறுமொழிகொடுத்து மிகவும் சந்தோஷி த்தனர்.

ஐயந்தான் சகல மனிதர்களும் பிரயாசைப்படுவதற்கெல்லாம் வருமானமாயிருப்பினும், அவர்கள் தங்களுடைய பார்வையில் ஐ

யம் கிடைக்குமெனும் சிந்தைலேசமுமின்றிப் பெரும்பாலும் இடைவிடாமல் முயற்சிக்கவேண்டியிருக்கிறது, இதன் மத்தியில் அவர்கள் ஒருகால் இருட்டில் தங்கள் விதையைவிதைத்து அதுவேரூன்றி உத்தேசபலனைக் கொடுக்குமென்ற நம்பிக்கையுடன் தங்கள்தைரியத்தையே ஆதாரவாகக்கொண்டு ஜீவிக்கநேரிடுகிறது. சிறந்த கொள்கைகளை ஆதரிப்பவர்கள் தொடர்ச்சியாக அனேக அபஜயங்களை அடைந்துவெற்றியைப்பெறுகின்றனர். கோட்டையைப் பிடிப்பதற்குமுன் இடிக்கிறபொழுதே தாக்குவோரில் அனேகர் மாய்ந்திருக்கின்றனர். அவர்கள் காட்டிய வீரமானது, அவர்களுக்கு நேர்ந்த எதிர்ப்பாலும், அந்த யுத்தத்தை வகித்திருக்கிற தைரியத்தாலும், அளவிடப்படுவதைப்போன்று அவ்வளவிற்கு அவர்களுடைய உடன்வெற்றியால் அளக்கப்படத்தக்கதன்று.

எப்பொழுதும் அபஜயப்படுகிற யுத்தத்தைப்புரியும் தேசாபிமானியும், தன் சத்துருக்களின் ஜயகோஷமத்தியில் மரணத்துக்குச் செல்லுகிற வைராக்கிய புருஷனும் நெடுங்காலம் அலைந்ததுக்கத்தையுடைய கஷ்டமான வருஷங்களிலெல்லாம், தளராமல் இருக்கிற கொலம்பஸ் (Colombus) ஐப்போன்ற புதுமை காண்பவரும், மனிதருடைய சித்தத்தில், மிகவும் முடிவும் பிரபலமுமான காரியசித்தியைக்காட்டிலும், மிகவும் ஆழ்ந்த சிரத்தையை உண்டாக்காநின்ற சன்மார்க்க உயர்வினுக்கு நிதர்சனமாக விளங்குகின்றனர். இவர் போன்ற திருஷ்டாந்தங்களின் முன்னர்: ஜடஸ்தூல சம்பந்தமான யுத்தத்தின் வெறிபிடித்த உற்சாகத்தில் மரணத்தை நோக்கிச்சென்று சாகும்படி மனிதரைத் தூண்டுகிற மிகவும் பெரிய பராக்கிரமச்செயல்கள், ஒப்பிடப்படுகையில், எவ்வளவு அற்பமானவைகளாகத் தோன்றுகின்றன.

ஆனால் உலகத்தில் வேண்டிய தைரியமானது, பெரும்பான்மையும் சுத்தவீரத்தன்மையதன்று. தைரியமானது, வாழ்க்கையின் தினசரிதங்களிலும், சரித்திர சம்பந்தமான யுத்தகளங்களிலும், காட்டப்படலாம். திருஷ்டாந்தமாக யோக்கியமாயிருத்தற்குரிய சாதாரண தைரியமும், துன்மார்க்கத்தை எதிர்க்கத்தக்க தைரியமும், உண்மைபேசுவதற்குரிய தைரியமும நாம் இல்லாத தன்மையை இருப்ப

துபோலத் தோற்றுவியாமல், நாம் உள்ளவாறே தோற்றுவிக்கும் தைரியமும், பிறருடைய பொருளைக்கொண்டு அயோக்கியமாய் வாழாமல் நமக்குரிய வகையைக்கொண்டு யோக்கியமாய் வாழ்தற்கான தைரியமும் அவசியமானது.

உலகத்தில் துக்கத்தின் மிகுதியும், துன்மார்க்கத்தின் மிகுதியும் ஒரு காரியத்தில் திடசித்தமும் தீர்மான புத்தியுமின்மையினாலே அதாவது தைரியமின்மையினாலே உண்டாகின்றன. மனிதர்களுக்குச் சரியானது இன்னதென்று தெரியவரும் ஆனால் அதைச் செய்வதற்குத் தைரியம் செலுத்தமுடியாமலிருக்கலாம். அவர்கள் செய்யவேண்டிய கடமையை உணரலாம். ஆனால், அதைச்செய்வதற்குவேண்டிய தீர்மான புத்தியை ஒருப்படுத்தமாட்டார்கள். கோழைத்தனமும் சிக்ஷையின்மையுங்கொண்ட மனிதன், ஒவ்வொரு துர்மனப்போக்கினுக்கும், வசப்பட்டவனாயிருக்கிறான். கூடாது என்று மறுத்துச்சொல்ல அவனாற்கூடாது; ஆனால் அதின் முற்பட்டு விழுகின்றனன். அவனுடைய சேர்க்கை கெட்டதாயிருந்தாற் கெட்டமாதிரியாய்க் கெட்டசெய்கைக்கு வெகு சுளுவாய் நடத்தப்படுவான்.

ஒழுக்கமானது தன்னுடைய சொந்த ஊக்கமான செய்கையால் தான் ஆதரிக்கப்பட்டுப் பலப்படுத்தப்படக் கூடுமென்பதைவிட வேறு நிச்சயப்பொருள் இல்லை. ஒழுக்கத்தினுக்கு மர்மஸ்தானமாகிய மனசானது தீர்மான புத்தியைக் கொள்ளும்படியான வழக்கங்களிற் பழக்கப்படவேண்டும். மற்றப்படி அது தீவழியை எதிர்க்கவாவது நல்வழியைத் தொடக்கவாவது திராணியற்றதாகிவிடும். தீர்மான புத்தியானது, உறுதியாய் நிற்பதற்கான சக்தியைக்கொடுக்கின்றது. ஆனால் எவ்வளவு சொற்பமாகினும் இடங்கொடுக்கும் சலனபுத்தியானது அழிவுக்கு இறங்கும்இறக்கவழியில் முதற்படியாகத்தான் ஆகலாம்.

ஒரு தீர்மானத்தைச் செய்வதில் பிறரை உதவிக்கு அழைப்பதானது, உபயோகமற்றதுமின்றி, மிகவும் கெட்டதாகவுமிருக்கின்றது. மனிதனானவன் அவசியம் நேரிடுங்காலங்களில் தன் சொந்தச் சக்தியை நம்பி சொந்தத்தைரியத்தைப் பற்றுக்கோடாக்கிக்கொள்ளும்படி தான் பழக்கப்படுத்திக் கொள்ளல்வேண்டும். மேஸிடன்

(Macedon) இன் அரசனானவர் யுத்தத்தின் மத்தியில், ஹெர்க்கல்ஸ் (Hercules) க்குப் பலிகொடுப்பதான வியாஜங்கொண்டு பக்கத்திலிருந்த பட்டினத்துக்குப் பின்வாங்கிச்சென்றாரென்றும், அப்பொழுது அவனுடைய எதிரி எமிலிஅஸ் (Emilius) என்பவன் தெய்வ உதவியைப் பிரார்த்தித்துக்கொண்டு, கையிற்கத்தியுடன் வெற்றிக்கு விஜயஞ்செய்து, போரைச் செயித்தானென்றும், புளுடார்ச் (Plutarch) என்பவர் சொல்லுகிறார். அப்படியே என்றும் நம்வாழ்க்கையின் நித்தியநடப்புகளிற் காணப்படுகின்றது.

அனேக வீரமான யோசனைகளைச்செய்து, வெறும் வார்த்தையாக முடிவதும் அனேக காரியங்களை யுத்தேசித்துச் செய்யாமலிருப்பதும், அனேக தந்திரங்களைவகுத்து ஆரம்பியாமலிருப்பதும் எல்லாம் சொற்ப தைரியமுள்ள தீர்மானபுத்தி இன்மையினாலேதான். செய்வதாக வாய்விண்ணாணம் பேசுவதினும், மௌனமாயிருப்பது மெத்தவும் நல்லது. ஏனெனில் நித்யநடப்பிலும், வேலைகளிலும், வாய்ஞானத்தைவிடச் செய்கைப்படுத்துவது மேலானது. எல்லாவற்றினுக்கும் சுருக்கமான விடையாவது செய்கையாம். செய்யப்பட வேண்டிய பெரிய முக்கியமான காரியங்களில், விஷயமானது தெளிவாயும் மிகவும் தீவிரமான அவசியமாயும் இருக்கையில், தீர்மானமின்றியிருப்பதற்குத் திடசித்தமில்லாதவர்களின் அதிக நிச்சயமான நியாயமானது, தீர்மான புத்தியின்மையைவிட வேறின்று. புதுமாதிரியாக வசிக்கவேண்டுமென்று எப்பொழுதும் கருதி அப்படியிருத்தற்கு ஒருபோதும் சாவகாசமின்றியிருத்தலானது, ஒருமனிதன் பட்டினிகிடந்து சாகிறவரைக்கும் ஒருநாளுக்கு ஒருநாள் அன்னபான நித்திரையை நிறுத்திவைப்பதுபோலாகின்றது, என்று டில்லாட்ஸன் (Tilotson) என்பவர் கூறுகின்றனர்.

(இன்னும்வரும்.)

உ

அடக்கம்.

அடக்கம் என்னும் சொல் அடங்கு என்னும் வினைப்பகுதியடியாகப்பிறந்து,அம் என்னும் தொழிற்பெயர்விகுதிபுணர்ந்து, "உயிர்வரினுக்குறள்மெய்விட்டோடும்" என்னுஞ்சூத்திரவிதியால் உகரங்கெட்டு, 'உடன்மே லுயிர்வந்தொன்றுவதியல்பே' என்னும் விதிப்படி ககரவல்லொற்றின்மே லகரவுயிரேறிநின்று, 'வலித்தன்மெலித்தல்' என்னும் விதியால் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்துவந்த தொழிற்பெயராம்.

அடக்கம்-பணிவு. அஃதாவது மனமொழிமெய்கள் புறத்திற் செல்லாதடங்கிநிற்றல்.

உலகத்தோற்றத்திற்கே மனங் காரணமாதல்பற்றி மனத்தை முன்னிறுத்தினார். பிரபஞ்சம் மனத்தானமைந்தது,என்னையெனின்; [1]'சடசூனியமாயுள்ள நெஞ்சுக்குப் பேர்மாத்திரமேயல்லாமல் ஆகாசத்தைப்போன்று உருவில்லை. நித்தியா நித்தியப்பொருள்களில் பயின்று வெளிப்பட்டுக் காண்பதே மனம். சங்கற்பமெங்குண்டோ அங்குமனமுமுண்டு.' நாமரூபமிரண்டுமில்லாமல் நிற்கின்ற பிரமத்தின் கற்பனையால் பஞ்சபூதங்களும் பஞ்சபூதங்களால் உலகமுந் தோற்றினவெனக் காண்க. [2]'மனத்தினாலெண்ணித் தானேவந்ததிவ்வுலகமாகும்.'

இம்மனத்தின் செய்கை என்ன? அது, 'கொள்ளித்தேள்கொட்டிக்குதிக்கின்றபேய்க்குரங்காய்,' 'வாதுக்குவந்தெதிர்த்த மல்லரைப்போன்று,' 'இமையளவுபோதையொருகற்பகாலம்பண்ணும்; இவ்வுலகமெவ்வுலகமோவென்ற எண்ணம் வருவிக்கும்; மாதர் சிற்றின்பமோவெனின், மகமேருவாக்கி, சுமையெடுமின் என்று; தான் சும்மா

1. ஞானவாசிட்டம். 2. கைவல்லியம்.

டுமாய், எம்மைச் சுமையாளுமாக்கி, நாளுந்துற்புத்திபண்ணி, யுள்ள நற்புத்தியாவையுஞ் சூறையிட்டு இந்திரசாலமமைய ஒரு கூத்துச்சமைந்தாடும்; அன்றியும், 'சொல்லானதிற்சற்றும் வாராதபிள்ளையைத்தொட்டில் வைத்தாட்டி யாட்டித் தொடையினைக் கிள்ளல்போற் சங்கற்பமொன்றிற்றெடுக்கும்; தொடுத்து அழிக்கும்; பொல்லாத வாதனையென்ற பூமியிடைப் போந்துதலை சுற்றியாடும்; புருஷனில் அடங்காத பூவைபோல், கட்டுக்கடங்காத காளையாய்த் தானே வெளிப்போந்து சஞ்சரிக்கும்; கல்லினுமிரும்பினும் வலியதாக்காட்டிடும்; காணாதவெல்லாம் கண்டதாக் காட்டியணுவாச்சுருக்கிடும்; எல்லாகபடநாடகஜாலமும் வல்லது. அம்மம்மா! இம்மனமாயைவெல்ல வெளிதோ? மேலும் நல்லவற்றைச் செய்யத்தூண்டினரை உயர்த்துவதும், தீயவற்றைச்செய்யவேவி, அவரை நரகத்தாழ்த்துவதும்ம் மனமே.

மனத்தைக் குரங்குஎன்றதென்னையெனின்;

3'வெறிகொள்குரங்கு மயக்கஞ் சொல்விளம்பி யருந்திறலைதுவும்,நெறிதான்மயங்கிச் சுழல்வதுபோனிமிடந்தானும் நில்லாதால்'என்பதனால் மனத்தைக்குரங்கென்றார். 'பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம் என்பதுபகிடதம்.

இம்மனத்தின் குணமூன்றும். அம்மூன்றிலொன்று கதித்தெழுந்தால் மற்றிரண்டும் கரந்து நிற்கும். தருமமிகுந்த சத்துவகுணமேலீட்டால் தெய்வசம்பத்துண்டாகும்; ரஜோ குணமருவுமாகில் உலகவாதனையும், தேகவாதனையும், சாஸ்திரவாதனையுந் தோன்றும்; தமோகுணஞ்சேரினோ அசுரசம்பத்துண்டாகும்; அசுர சம்பத்தாவன; சோம்பல், அறியாமை, நித்திரை முதலியன. மனம் இயற்கையிற் கண்ணாடிக்குச்சமானமான சுத்தசத்துவசொரூபம். அந்நிலையிலம்மனம் ஓட்டையுறவாகவும் பொன்னைப் பகையாகவும் பாவித்து; கேடு, செல்வம், கீர்த்தி,நிந்தை, வீடு,காடு என்பனவற்றைச்சமமாய்ப் பார்க்குந்தன்மைத்து. மற்றிரண்டுகுணங்களுமனத்தின்கண் வந்து பொருந்தி மறைவன. மறைவனவெனினும், அவ்வகைமறைத லெளிதினியையாததாம். இவ்விரண்டு குணப்பிரவர்த்தியானும், மனத்திடத்தே, காமம் வெகுளி மயக்கமென முக்குற்றநிகழும்.

---

3. கிட்டானுபூதி.

காமமாவது ஆசை. அது கேட்டுக்கு வித்து. கூட்டுக்குப் பகை. ஒருவன் தன்னவாவையடக்க முயலானேல், 'பிடிபடுக்கப்பட்ட களிறு' போன்று, நிரயமெனும் பாழ்ங்குழியில் வீழ்ந்து அல்லற்படுகிறான். இவ்வாசையே பிறப்புக்குக் காரணமாம். சத்தியஞானத்தைப்பெற்று முத்தியடைய விருப்பவன்பால், பையநுழைந்து, அவனை மீண்டும் பிறவித் துன்பத்திலாழச்செய்வதிவ்வாசைதான். இவ்வாசையென்னும் பெருங்காற்றினூடே பனமிலவம்பஞ்சென்னவலையுங்காலே, கற்றதும் கேட்டதும் போய் முத்தியடையவேண்டுமென்னுநேசமுமிறந்து, கொடுமைகளெல்லாம் பொருந்தியுழலுவன். ஆதலால் அறிவோரிவ்வாசையை யஞ்சிக்காத்தல்வேண்டும். மேலுமிவ்வாசைக்கோரளவுமில்லை; அகிலபுவனாதிபதியாயுள்ளவனும் தன்னாணைகடலினுஞ் செல்லநினைவன். குபேரசம்பத்துள்ளவனும் ரசவாதம் கைகூடவல்லவன். நீண்டகாலமுலகில் வாழ்ந்தவனும் காயகற்பந்தேடித்திரிவன். இப்படியிவர் 'சேவித்துஞ், சென்றிரந்தும், தெண்ணீர்க்கடல் கடந்தும், பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும் போவிப்பதெல்லாம் யோசிக்கும் வேளையில் நாழியரிசிக்கேயாய் முடியும். ஆதலால், உலகத்தில் அறறவன் என்று சொல்லப்படுபவன் ஆசையற்றவனொருவனே. அதையொன்றைமாத்திரம் வைத்துக்கொண்டு மற்றெல்லாவற்றையும் ஒருவன் நீக்கினானேனும் அவனுக்குப் பிறவி நீங்காதாம்.

இவ்வகைத் தீயதன்மையுள்ளவாசை மண், பெண், பொன்னெனமூன்றுவகைப்படும். இதை வேறொருவகை ஈஷணாத்திரயமென்பார் வடநூலார். அவை; வித்தம், தாரம், புத்திரன் எனமூன்றுமாம். மண்ணையும் பொன்னையும் வித்தத்துள்ளடக்கினார். இவ்வித்தம், தாரம், புத்திரர் மூன்றனுள் ஒன்றும் நிலைத்தலில்லை.

1 "மனையாளும் மக்களும் வாழ்வுந்தனமுந் தன்வாசன்மட்டே"

2 "இளமையுநிலையாவாலின்பமுநின்றவல்ல
வளமையுமஃதேயால்வைகலுந்துன்பவெள்ளம்
உளவெனநினையாதேசெல்கதிக்கென்றுமொன்று
விளைநிலமுழுவார் போல்வித்துநீர்செய்துகொண்மின்."

---

1. பட்டினத்தடிகள். 2. வளையாபதி.

இவ்வகை நிலையாத பொருள்களை நிலையுள்ளனவென் றுணர்ந்தால் ஆசையறுவதெப்படி? பற்று நீங்காவிடிற்பவமுண்டே? இதனை லன்றோ.

"நில்லாதவற்றைநிலையினவென் றுணரும்
புல்லறிவாண்மைகடை."

என்றார் நாயனாரும்.

இனி, ஒருவன் காமத்தைஅடக்க எவ்வளவு முயலவேண்டுமோ அதிற்பன்மடங்கதிகமாக வெகுளியைவிலக்க முயலவேண்டும். ஏனெனின், 'எல்லாம் வெகுண்டார்முற்றோன்றக்கெடு' மாதலால்,இவ்வெகுளி ஒருவற்கு வெறுப்பு நிகழுழியும், விருப்புற்ற பொருள்கிட்டாதுழியுந் தோன்றுவது. விருப்பையொழிக்க வெகுளி தானேயடங்கும். இவ்வெகுளி மிகப்பொல்லாதது,

"சினமென்னுஞ்சேர்ந்தாரைக்கொல்லியினமென்னு
மேமப்புணையைச்சுடும்."

இவ்வகைத் தீயசெயலோடுங்கூடி உள்ளத்தைக் கவர்ந்தெழுந்து ஓங்குகின்ற சினத்தைக் காத்துக்கொள்ளுங்குணமே குணமாம். ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள விரும்புவானாயின் தன் சினத்தை வெளிவராது காக்கக்கடவன். அப்படியவன் காவானேயானலவனையே யச்சினங்கொன்றுவிடும். முக்குற்றங்களில் மூன்றாவதாகிய மயக்கம் என்பது பிராந்தியாம். அஃது ஒருவனது நல்லறிவை மாற்றித் தீயநெறியிலுய்த்து, முத்தியாகிய வீட்டுக்குட் புகாதபடி, கபாடபந்தனம்பண்ணி, நால்வகைப் பிறப்புளடங்கிய வெழுவகைத்தோற்றத்துள்ளும் அவனைப் புகுத்திவருவது. இம்மயக்கை ஞானநூல்களைக் கற்றும் கேட்டும் சிந்தித்துந் தெளியவேண்டும்.

இம் முக்குற்றங்களையும் பொருந்திய மனம் வாயுவினம்சமாம். அஃது அந்தக்கரணநிலை ஐந்தனுளொன்று. இம்மனமடங்கின் பஞ்சேந்திரியங்களுமடங்கும்; பன்னிரண்டங்குலம் பரியும் பிராணவாயுவும் அடங்கும்; மற்றயாவுமொடுங்கும். ஒருவன் ஒவ்வோர் இந்திரியங்களையுந் தனித்தனியடக்கமுயலின், ஒன்றடங்க மற்றொன்று சேட்டிக்கும். மனமடங்கிலோ பஞ்சேந்திரியங்களுமடங்கிப்போம். எப்படியெனின், ஓர் ஐந்தலைப் பாம்பின்றலைகளில் ஒன்றையடக்க

*

மற்றொரு தலைவிஷத்தைக் காணும், கழுத்தைநறுக்கின் ஐந்தலைகளுமற்றபடி. மேலும் ஆகாசத்தைமறைக்க ஒரு வஸ்திரம் ஆயத்தம் பண்ணுவதுபோல யோகத்தால் வளியையடக்க முயலுவதைவிட்டு, சிந்தையைப்புறத்தே சேட்டிக்காது அடக்குவானானால், பிராணவாயு தானேயடங்கும். கண்ணைமூட வான்மறைவதை நாம் கண்கூடாகப் பார்க்கவில்லையா? இம்மனம் அடங்காமல் ஒரு சித்தியுங்கூடாது.

1 "வீயுமோகிளைவேரறுமல்விடஞ்செய்மோகன்விவேகனான்
மாயுமோவுயர்மாயையாருமனத்தினாருமிருக்கவே."

இக்காரணத்தானே,

2 "உன்னெண்ணங்கள் உன்னிடத்தில் பேசச்செய்யாதே; அப்பேச்சின் செய்கைகளுக்கும் அளவிறந்து மனங்கொடுக்காதே" என்றார் மேலையோரும்.

இத்தகையமனமெனும் பூமியைத் திருத்திப் பண்படுத்துதலெளிதாமோ? எத்தனைபேர் மனமலைந்து அவதானநழுவிக் கெட்டவர்கள்? வெட்டவெட்ட ஓயாமல் தளிர்விட்டுப்படரும் பாசாடவி என்ற வினைக்காட்டை வெட்டிப் பாழ்பண்ணி, வெகுளிகளென்கின்றபராட்டு முட்காட்டையெல்லாம் வேரறப்பிடுங்கி, கருணையென்ற வீரகண்டாமணிபுனைந்து, துணிவென்றவாளையுந்தரித்து,அகங்காரமென்ற வேங்கைப்புலியை வேட்டையாடிக் கொன்று வெட்கம்,துக்கம்,வெருட்சி, மருட்சி, விராகம், சினம் என்கிற துஷ்டமிருகங்களெல்லாம் வாலைத்தூக்கியொன்றோடொன்று சேராமல் வெருவியோடவடித்து, மாயையெனுமலைப்பாம்பை விவேகத்தாற் கொன்று, அந்தக்கரணத்தில் விரிந்தோடுகின்ற கருவிவேரை விசாரமென்ற மண்வெட்டியால் வெட்டி, மேட்டிமையென்னுமரத்தையும் மற்ற வெட்டுண்ட மாறுகளையுந் தவக்கனலை மூட்டியெரித்து, அக்கனல்வடவையெனப்பரந்தபின்னர், சூரியனைக்கண்ட பனிபோல் மோகமாயையிருளெலாம் போக, மிருந்துள்ள வினைக்கட்டையும் அவ்வொளியி னுதவியாற் சுட்டுப் பின்பு, அகந்தையென்னுங் கற்பாறையைச் சுழியென்னுமுளியினாற் சொச்சமறவெட்டி, இடைபிங்கலையென்னுஞ் சகட்டிலேற்றி,தொந்தமென்னுந் தோற்கயிற்றைக்கட்டி துடுக்கு, முரட்டுத்தனம் என்றஇர

1. மோகவதைப்பரணி. 2. Shakespeare.

ண்டுமாடுகளும் அச்சாகாட்டையிழுக்க, மெய்ஞ்ஞான வைராக்கிய மென்ற் சவுக்கினாலடித்து வேலைவாங்கி, தூராதமிடியெனுந் தொல் லைப்பெருங்கேணியையதனாற்றூர்த்து நிரப்பி, பிரணவசொரூப நிச்ச யமாகிய கருமுகில்கள் சூழ்ந்துநின்று இடைவிடாது ஆனந்தமாரி பொழிந்தாலன்றோ நெஞ்சகமென்னும் பூமி சுத்தமாய்த் திருந்தும்? இம்மனத்தையடக்கினவனே சரியை கிரியை யோக ஞாநத்திற் கை தேர்ந்த சூரன்.

3 "வாயுவெனமறுகின்றமனமடங்கும்வகைதபெப்போன்
யாவனவனரிபிரமனிந்திரன்சண்முகன்குருவும்
ஏயபலதேவதைகள்யோகிதபோதனனறிஞன்
ஆயினெலாமுடையானுமவன்வணங்குநுணங்கிடையாய்."

இம்மனமடங்கப்பெறின் கிடையாததொன்றுமில்லை. அது வேமற்றெல்லாவற்றிற்கும் காரணம். வாக்கும், காயமும் மனத்தி னின்றேயுண்டாவன. இம்மனத்தையடக்குதல் துறவிகளுக்கு இன் றியமையாததாயினும் யார்க்கும் பொதுவே.

நிற்க, ஒருவன் எதையடக்காதுவிட்டாலும் நாவையடக்கக்கட வன். அல்லானேல், சொற்சோர்வுபட்டுத் துன்பமடைவன். தான் சொன்ன தீயசொற்களிலிருந்து பிறனுக்குற்ற தீமை ஒன்றினளவே யாயினும் இவனுக்கு ஒருவிதமான நன்மையுமுண்டாகாது.

தீயசொற்களாவன, பொய், குறளை, வன்சொல், பயனில்சொ ல்லென நான்குமாம்.

பொய்யினும்ஒருவனுக்குக்கேடுவிளைப்பது இம்மையினுமில்லை. அம்மையினுமப்படியே. பிரமன் சிரிழந்தது பேசிய பொய்யாலன் றோ? ஆதவனம்புலியங்கி என முச்சுடரும் உலகத்தின்கணுள்ளஇரு ளைநீக்குமேயன்றி ஒருவனது மனவிருளை நீக்கவல்லவோ? 'செய்மை யண்மையினுயிர்க்கொரு துணையெனச் சிறந்த வாய்மையானே யகந் தூய்மையாம். இக்காரணம்பற்றியே,

"எல்லாவிளக்கும்விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யாவிளக்கேவிளக்கு."

என்றார்.

---

3. தேவிகாலோத்திரம்.

அன்றியும், இப்பொய்யுரைக்குமவாய் இம்மையின்பத்தையழிக்கும்; எச்சமறவொழிக்கும்; அம்மையருநரகத்தாழ்விக்கும்; அறந்தேய்க்கும்; அலர்மகளையுநீக்கும். ஒருவனது சுற்றத்தாரும், வீடும், மக்களும், அன்பும், சிறப்பும், செல்வமும், வல்லபமும், கீர்த்தியும் அவன் நினைத்தவையும், செய்ததவமும், மற்றைப் புண்ணியங்களும், எல்லாம் ஒருசேர இப்பொய்மையாற்பொன்றும். ஒரு பொய்சொல்லுவதா லிவ்வுலகமேயன்று மூவுலகும் தனக்குள்ளடங்குமென்றாலும் ஒருவன் பொய்சொல்லாதிருப்பானாக. இப்பொய்மையின்பெருமையையுணர்த்தவே 'யாமெய்யாக்கண்டவற்றுள்' என்று தம்மைத்தாமே சான்றுகூறிப் பெரியோர் தொடங்கினர்.

குறளை என்பது புறங்கூறுதலாம்.

'கோட்செவிக்குறளை காற்றுடனெருப்பு' ஒருவன் புறங்கூறுவானானால், புத்திரமித்திராதிகளற்று, வடுச்சொற்பலவும் பெற்று, பலராலுமெள்ளப்படுவான். அதனால், அறங்கொன்று பலநவைகளைச்செய்யினும் ஒருவன் மறந்தும் புறங்கூறாதிருப்பானாக. யாதொருபகையுமில்லாது, பிறர்படுந்துன்பத்தைப்பார்த்துக் களித்தலையே பயனாகக்கொண்டு, பிறரைப்பற்றிய குற்றங்களைத் தூற்றித்திரிபவனைக் கொலைஞனைக்கண்டகல்வதையொப்பவிட்டு நீங்கவேண்டும். ஒருவன் புறங்கூறியும் பொய்சொல்லியும் உயிர்வாழ்வதைக்காட்டிலும் சாதன்மிகவினியது. என்னை? சாவதினால் மேற்சொல்லிய குற்றங்களைச்செய்யும் அவகாசமற்றுவிடுகிறது. அப்பாவச்செய்கையால் வருநரகவாதனையுமொழிந்து கூற்றுவன் மொய்ப்புயத்தண்டத்துக் குந்தப்புகிறான். இக்குறளையையொழிக்கநெறியிலதோ எனின் உண்டு. பிறர்குற்றத்தைத் தன்குற்றம்போற் பார்க்கும் பெருந்தன்மையைக் கைக்கொண்டால் குறளைபேசும் வழக்கம் எதிர்நிற்குமா?

இனி, வன்சொல்லுங் கொடுந்தகையதே. ஒரு புன்சொல்செய்யுமிடர்ப்பாட்டையு மின்சொல் செய்யுஞ் சுகத்தையும் ஒருவன் நோக்குவானேல், புன்சொல்வழியனாய் வாழ்வானா? "வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம்" * பணிவாகச்சொல்லும் ஓர் விடை

* A soft answer turneth away wroth.

கோபத்தைமாற்றிவிடும். ஒருவனுக்குப் பணிவுடைமை இன்சொலுடைமை என்னுமிரண்டினுஞ் சிறந்த வாபரணமில்லை. இன்சொலினியவை பயப்பதைக்கண்டும் ஏனோ ஒருவன் பழமிருக்கக் காய் கவர்வதுபோல் வன்சொல்லைப்போற்றுவது?

பயனில்சொல்குற்றமென்பதுஎன்னை? நன்று. அப்பயனில்சொல்நன்மைபயத்தலில்லாமையானும், அதிற்பழக, நாளடைவிலொருவனுக்குறுவது தீங்கேயாதலானும், அறிவுடையாராலது இகழப்பெற்றதனானுமது வாக்கின்குற்றங்கள் நான்கனுளொன்றே. அப்பயனிலுரையாடல் நட்பிடைக்குய்யம் வைத்தலினுந்தீது. அவற்றை நீர்மையுடையார் பேசார். பேசின், சீர்மை சிறப்பொடு நீங்கும். மேலும் அவற்றைச் சொல்பவனை மகனெனறகாது. மக்களுட் பதடியென்றுரைத்தலே பொருத்தம். ஆதலின்,

> "சொல்லுகசொல்லிற்பயனுடையசொல்லற்க
> சொல்லிற்பயனிலாச்சொல்."

இதுவரைக் கூறிப்போந்தவாற்றால் நாவடக்கம் வேண்டுமென்பதுகொற்ளப்பெற்றது என்னை? தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறும். நாவினாற்சுட்டவடு ஆறாது. ஆறுந் தன்மைத்தாதலிற் புண்ணென்றும், ஆறாத்தன்மையதாதலின் வடுவென்றும் கூறப்பட்டன.

அதனால்,

> * "படிறும்பயனிலவும்பட்டியுரையும்
> வசையும்புறனுமுரையாரேயென்றும்
> அசையாதவுள்ளத்தவர்."

மனமொழிமெய்களில் மூன்றாவதான மெய்யினடக்கமும் மற்றவற்றைப்போல அத்துணையவசியமானதே. அதிகமாய் வேண்டியதென்றும் சொல்லலாம். மனத்தடக்கமில்லாவிடின் பிறருக்கு யாதொரு தீங்குமிழைக்க நேராமலுமிருக்கலாம். மெய்யடக்கமில்லாவிடின் பிறருக்கு நிச்சயந் தீங்கைச்செய்யநேரும். அதனால் நமக்கு வரும் துன்பமும் பல. அம்மெய்யடக்கம் நடையுடை பாவனையடக்கங்களில் ஒடுங்கும்.

---

* ஆசாரக்கோவை.

நடையிடக்கமாவது பெருமித நடையொழிந்துநிற்றல். நடையென்பதொழுக்கம். அவ்வொழுக்கம் நல்லொழுக்கந் தீயொழுக்கம் என இருவகைப்படும்.

தீயொழுக்கமாவன, பிறனில்விழைதல், இடங்கழியாளரொடு நட்பு, அழுக்கறுத்துத்திரிதல், பிறன்பொருள் விழைதல், கள்ளல், கள்ளுண்ணல், அறங்கெடமுயலுதல், அருளினெஞ்சுடைமை, பிறரைச்சீறல், மன்னுயிர்கோறல், மாதவர்க்குத்துயர்செயல், குரவனை மகளிரைவாளிற் கொல்லுதல், தாய்பசியுழந்துயிர்தளரத்தான் தன் பெருவயிறுநிரப்புதல், பொய்க்கரிக்கூறல், அடைக்கலப்பொருளைக் காத்தல், இல்லிற்றீயிடன்முதற்பலவாம். இவை நரகவாதனைக்கேதுவாம். இவையல்லன நல்லொழுக்கமாம்.

எனினும், அவற்றையும், யானறியளவையிற் சிறிது முறைப்படுத்திக்கூறுவல். இந்நல்லொழுக்கை.

ஆசான்மாட்டொழுக்கம்
அரசன்மாட்டொழுக்கம்
பெரியாரிடத்தொழுக்கம்
நட்பாளரிடத்தொழுக்கம்
தீங்கிழைத்தார்மாட்டொழுக்கம்
சிறியாரிடத்தொழுக்கம்
பொது. எனஎழுகூறாக்கிப்பேசலாம்.

ஆசான் மாட்டு, குளிர்கால்வருந்துபவன்நெருப்பினிடத்தில்லொழுகுவதுபோல் அதிகம் நெருங்காமலும், தான்வித்தையைக் கற்றுக் கொள்ளவேண்டியகாரியமிருத்தலால், அவர்காய்வதற்கு அஞ்சி நீங்கிவிடாமலும், சந்தோஷமான உள்ளத்தோடு, அவர்மனமுவக்குந்திறத்திலொழுகி, தருமநெறி கடவாமல் வழிபடல்வேண்டும். மேலுமாசான் நின்றால் தானுமடக்கத்தால் நிற்கக்கடவன். இருந்தக்கால் அவரேவாமே ஏகாதிருக்கக் கடவன். அவர்பாடஞ்சொல்லுங் கால் நெஞ்சுகளனாக செவிவாய்தலாகக் கேட்டவற்றை விடாதுளத்தமைக்கும் வகைகவனமாய்க்கேட்கக் கடவன். அவர் திருத்தினல் மீண்டுங்கேளாதிருப்பானாக. இம்முறையே (Discipline) ஒழுங்குஎன ஆங்கிலேயரால் பாடசாலைகளில் வற்புறுத்தப்படுவது.

அரசன் கடைவாயில்காவலர் தடுக்கிற்காயலாகாது. அரசனோடுமிருந்த தோழமை கொள்ளலாகாது: அவனுடைய தானத்தில் பொறுமைகொள்ளல் தகுதியன்று. அரசனன்ன அலங்கரித்துக் கொள்ளலாகாது. அரசர்முன் தம்முடைய செல்வப்பெருமையையும், கல்விப்பெருமையையும், தேஜசையும், குணத்தையும்பற்றி, குடிப்பிறந்தார் கூறார். மேலும் முனியார், துனியார் முகத்தெதிர் நில்லார். தனிமையிடத்துக்கட்டங்கருமஞ்சொல்லார். இனிமையையாம் அறிவோமென்னார். அவர்காக்கைவெளிதெனினும், மாறுகாட்டார். அரசன்தனக்கு வேண்டியவனென்று வேளையறியாமலெதையும் ஒருவன் சொல்லாதிருப்பானாக. சொல்லின்காரிய மிழப்பதுடன் அரசதண்டனைக்கும் பாத்திரமாகவேண்டிவரும்.

பெரியாரிடத்து, நகைத்தல், தும்முதல், கொட்டாவி விடுதல். காறிப்பு, உடுக்கையிகத்தல், செவிதலைமுதலிய சொறிதல், கைமேலெடுத்துரைத்தல், பெண்டிர்மேனோக்கல், செவிச்சொல்கோடல், எழுச்சிக்கட்பிற்கூவல், போகுமிடத்தைப்பற்றி வினவுதல், எதிர்நின்றுகூறல், செருப்பேறல், குடைபிடித்தல், வாகனதிகளிற் செல்லலிவைகுற்றமாம். குரவருக்கிருசார்வும் செல்லவேண்டும். வலம் நல்லது.

நட்பாளரிடத்து* "நன்றாய்ப்பழகுக. ஆனால் ஒருவிதத்தானும் கௌரவம்கெடநடந்து கொள்ளற்க. உனக்கிருக்கும் சிநேகிதர்களோடுபழகலாமாவென்று பரீக்ஷித்துத் துணிந்தபிறகு அவர்களை யெஃகு வளையங்கொண்டு ஓட்டுமரங்களைப்பிணிப்பதுபோல் உடலிரண்டும் உயிரொன்றுமாக நின்மனத்திற் பிணிப்பாயாக. ஆனால் புதிதாகவந்தவெவ்வொருதோழனோடும் பழகி உன் கையைசுரணையறச்செய்யற்க. மேலும்சிநேகஞ் செய்யமுயலுவதினும் அந்நட்பைக்காப்பாற்ற அதிகம்முயலவேண்டும். நீக்கமற்றஉன்னன்பன் உனக்குத்தீங்குசெய்ய

---

* Be thou familiar but by no means vulgar
Those friends thou hast and their adoption tried
Grapple them to thy soul with hoops of steel
But do not dull thy palm with entertainment
Of each newhatched unfledged comrade.—Shakespeare

நேர்ந்தாலும், அவன்செய்ததாக எண்ணிநட்பைப்பிரித்து விடாமல் நின்னூழ்வினையவன்மூலமாகவந்ததென்றெண்ணி, அவன்நட்பைப்ப லப்படுத்தமுயலுக.

தீங்கிழைத்தாருக்கு நன்மைசெய்க. அஃது, அவர்களுக்குத் தங்கள் குற்றத்தைத் தெரிவித்து, அவர்களையே திருந்தச்செய்வதுமன்றி, நின்னையும் பலர்முன்னிலையி லுயர்த்திக்காட்டும்.

சிறுவர்மாட்டன்புள்ளவராயிருத்தல் வேண்டும். அவர் இயற்கையில் அறியாமைவாய்ந்தவர். அவர்செய்வனவத்தனையும்பிழையாகவேயிருக்கும். அதற்காக அவர்களிடத்திற் கோபங்கொண்டுதண்டிக்கமுயல்ற்க. செல்விடத்துக்காப்பவனே சினங்காப்பவன். அல்லாதவிடத்துஇவன் காத்தாலென் காவாக்காலென். அவரைசதா திருத்தவுமுயலவேண்டும். சிறியரானவரதேதீமை. நன்னூலறிஞரானவரதே பொறை.

பொதுவாக, பார்ப்பார், தவரே சுமந்தார் பிணிப்பட்டார், மூத்தாரிளையார் பசுப்பெண்டி ரிவர்க்கட்கு ஆற்றவழி விலகினவரே சிறந்தவராவர். அன்றியும் பெருத்தசண்டை நடக்குமிடத்திலும், கள்குடித்துப்பிதற்றுமிடத்திலும், விலைமாதர் தெருவினும், நீங்கிப்பிரிந்த நண்பரிடத்திலும்,பலர் வந்துகூடும் நீர்க்கரையிலும் நில்லாதொழிக. நிற்கநேரினும் நீண்டநேரம் நில்லற்க. இந்நடையெல்லாமுணர்த்துவதெனின் இடமுங் காலமு மிடங்கொடாது.

* "இடர்தீர்த்தல் எள்ளாமை கீழினஞ்சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பி னடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்கண்
விண்டவர்நூல் வேண்டாவிடும்."

இனிI "உன்னுடைய உடை செல்வத்துக்குந் தக்கபடி விலையேறப் பெற்றதாயிருக்கட்டும்; ஆனால் படாடோபமுள்ளதாகவேண்

---

* ஏலாதி.

I Costly thy habit as thy purse can buy
But not expressed in fancy, rich not gaudy
For the apparel oft proclaims the man—Shakespeare.

டாம், விலையுயர்ந்ததை வேண்டாமென்பாரில்லை. ஆனால் இடம்பமான வுடை வேண்டாம். ஏனெனில் ஒருவனது உடை பலமுறைகளில் அவனது உண்மையான தன்மையை வெளிப்படுத்தித் தூற்றுகிறது" இதையே,

> "உடை நடை சொற்சோர்வு வைதலிந்நான்கும்
> நிலைமைக்கும் கல்விக்கும் ஆண்மைக்கும் தத்தம்
> குடிமைக்குந்தக்க செயல்." என்றார் முள்ளியாரும்.

பாவனையாவது ஒருவனுக்குத் தன்னைப்பற்றியேற்பட்டுள்ள மதிப்பு. அகத்துமுகங்கண்ணாடியாதல் பற்றி அதுமுகத்திற்றோன்றாநிற்கும். உண்மைநூலுணர்ச்சியில்லாதவரே 'வளநிதிபடைத்தோமென்றும், வடிவவில்லுடையோமென்றும், இளமையிற்சிறந்தோமென்றும், எழினலமுடையோமென்றும்" செருக்கித் தம்மைமறந்து, தானல்லாடலைத் தானென்றும், தனதல் பொருளைத்தனதென்றும் பாவித்து மயங்கித் திரிவார்கள். வேறுசிலர் ஞானிகள்போற் பேசி, அதற்குத் தக்கவேடமும் பூண்டு, நன்னெறியினடந்து, நல்லறங்களைச் செய்புமவர்களிடத்துச் சென்று நீங்குகவெனவுரைத்து, இந்நிலை மேலாம் பிரமத்தினிலை யெனவும் பிதற்றித் திரிவார்கள். இம்மதியிலிகள் தாங்கெடுவதன்றி மற்றோரையுங் கெடுக்குமெண்ணம் பூண்டோர். எப்போதும் ஒருவன் தன்னைப்பற்றித் தாழ்ந்த அபிப்பிராயமுடையவனாயிருப்பானாக. ஆயினும், "தன்னைப்பற்றிய மிக்கதாழ்மையான அபிப்பிராயத்தையே ஒருவன் கொண்டிருப்பானானால் அவனது உண்மை யாற்றலும்போய் மிக்கசெர்வமுள்ளவனைப்போல் இவனாலும் உலகம் பயன்பெறாமற் போகிறது" * என்று ஓர் மேலைப்பெரியோர் கூறுகிறார். ஆயினும் தாழ்மையான பாவம் யாதொருவனைத் தீமையும் பயக்குமியல்புடைத்தல்ல. அடக்கத்துக்குத்திருநாவுக்கரசை ஒருமாதிரியாகக் கொள்ளலாம். அவர் பாடல்களால் அவருடைய பணிவு நன்குபோதரும். முடிவாக, இவ்வகை மனமொழி மெய்களாற் செய்யும் அடக்கம் யாவர்க்கும் இன்றியமையாதது. செல்வர்க்கு அது மற்றொரு செல்வத்தின்றகைத்து. புலவர்க்கு மற்றோர் புலமைத் தகைத்து. எளியவர்க்குந்தொழிலாளர்க்கும், தத்தம்

---

* John Selden.

வாழ்நாளில் சுகத்தைக்கொடுப்பதுமன்றி, அவரவர் தத்தந் தொழிலை ச்செவ்வனே செய்து மேம்படத்தக்ககருவியுமாகிறது. "மேம்பாடுற அடக்கமே சிறந்த சோபானமாகும்" என்றார் செகப்பிரியரும். எந்தச் சாதியாரிடத்துஇவ்வடக்கம்நிலைத்துளதோ அச்சாதியார்க்குஎவ்விடத்தும் எக்காலத்தும் எக்காரணத்தானுந் தீங்குறாது. இவ்வகையடக்முடையாரை யறிவிலாரென் றெண்ணி அவர்களிடத்தின் மிகை யொழுக்கங் காட்டலும் பெரும்பேதைமைத்து.

"அடக்கமமரருளுய்க்குமடங்காமை
யாரிருளுய்த்து விடும்.

ம. வெ. சிவசுப்பிரமணிய ஐயர்.

உ
கணபதிதுணை.

திருக்குறளாராய்ச்சி.

அறத்துப்பால்—பாயிரவியல்.

முதலாவதுஅதிகாரம் கடவுள்வாழ்த்து.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்பது முதற்பாட்டு. இதற்குப் பரிமேலழகருரையினைக் காண்டிகையாகக்கொண்டு விருத்தி எழுதப்படும்.

உரைப்பாயிரம்:—இந்திரன் முதலிய......வாழ்த்துக்கூறுகின்றார்.

கடவுள்வாழ்த்து அவதாரிகை:—அஃதாவது........கூறினாரெனவுணர்க.

அகரமுதல......முதற்றேயுலகு.

இதன்பொருள்:—எழுத்தெல்லாம் அகரமுதல-எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடைய: உலகு ஆதிபகவன் முதற்று-அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து; என்றவாறு.

இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க. தமிழெழுத்துக்கேயன்றி வடவெழுத்துக்கும் முதலாதல் நோக்கி எழுத்தெல்லாம் என்றார். ஆதிபகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. உலகென்றது ஈண்டு உயிர்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின் ஆதிபகவன் முதற்றே எனஉலகின்மேல் வைத்துக்கூறினர்; கூறினரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.

விருத்தியுரை.

இனி, எந்நூலையுரைப்பினும் அந்நூற்குப்பாயிரமுரைத்துரைத்தலே மரபாகலான் அஃதுரைக்கற்பாற்று.

அப்பாயிரம் பொதுவுஞ் சிறப்புமென இருவகையவாயினும் அவற்றுட் பொதுப்பாயிரம் எல்லாநூன்முகத்தும் வேறுபாடின்றி ஒருபடித்தாந்தன்மைத்தாகலின் இலக்கணநூலானுணரப்படுமாகலான் அஃதொழித்து ஏனைச்சிறப்புப்பாயிரமே ஈண்டு உரைக்கப்படும்.

அப்பாயிரந்தான் இந்நூலையரங்கேற்றுகாலை அவைக்களத்திருந்துகேட்ட நல்லிசைப்புலவரும் அவர்க்குப் பிற்காலத்திற் சங்கமேறிய நல்லிசைப்புலவருட் சிலரும்பாடிய திருவள்ளுவமாலையேயாம்.

அத்திருவள்ளுவமாலைக்குச்சரவணப் பெருமாளையர்செய்தஉரையினைக்காண்டிகையாகக்கொண்டு இந்நாலிறுதியில் விருத்தியெழுதப்படுமாகலின் ஈண்டைக்கு வேண்டுவமாத்திரையே அதனுட் கொண்டு ஆக்கியோன் பெயர்முதலாயவற்றை முறையே கூறப்படும்.

“திருத்தகுதெய்வத்திரு வள்ளுவரென” அசரீரிகூற்றாகவும் “வள்ளுவ” னெனநாமகள் கூற்றாகவும் இருபுலவரும் “மன்புலவ” னெனஇறையனாரும் நான்முகத்தோன்கூறெனக்கொண்டு “நான்முகத்தோன் அய” னெனஉக்கிரப்பெருவழுதிமுதலாயினாரும் “வள்ளுவனா” ரெனக்கபிலர்முதலாயினாரும் “வாலறிவினா” ரெனப்பரணரும் “தானேமுழுதுணர்ந்தோ,, னென நக்கீரனாரும் “தே” வெனமாமூலனாரும்

"வள்ளுவ" ரெனச் சீத்தலைச் சாத்தனார் முதலாயினோரும் "முதற்பாவல"ரென ஆசிரியர் நல்லந்துவனார் முதலாயினோருந் "தெய்வ" மெனக் கீரந்தையார் முதலாயினோரும் "மாதானுபங்கி மருவிலார்செந்நாப்போதா" ரெனநல்கூர்வேள்வியாரும் "பெருநாவல" ரெனத்தொடித்தலை விழுத்தண்டினோரும "திருவள்ளுவ"ரென வெள்ளிவீதியார் முதலாயினோரும் "பிணக்கிலாவாய் மொழியா" ரெனஉருத்திரசன்மகண்ணரும் "ஏதமிலா" ரெனப்பெருஞ்சீத்தனாரும் "புலவ" ரெனச்செங்குன்றூர்க்கிழாரும் "தேவிற்சிறந்தா"ரென முதுகூற்றனாரும். "தேவ" ரெனச்செயிர்க்காவிரியார் மகனாரும் "நாப்புலமையா" ரெனக்கவுணியனாரும் "தெள்ளியா" ரென மதுரைப்பாலாசிரியனாரும் உரைத்தவாற்றான் ஆக்கியோன்பெயரும பெருமையு முணரப்படும். "வள்ளுவரோடொக்கவிருக்க வுருத்திரசன்ம" ரெனவும் "மறந்தேயும் வள்ளுவனென்பானோர்பேதை" யெனவும் "வல்லாரார் வள்ளுவரல்லா" லெனவும் "முதற்பாவலரொப்பாரெப்பாவலரினுமில்" லெனவும் "செந்நாப்போதார் புனற்கூடற்கச்" சேனவும் பிறவும் உரைத்தவாற்றான் அவர்பெருமையுணரப்படும்.

"முதல் நான்மறைபாடா இடைப்பாரதம் பகர்ந்தேன் பின்வள்ளுவன் வாய்தென்வாக்" கெனவும் "நான்மறைப்பொருளைத்தந்துரைத்தநூ" லெனவும் "சாற்றியபல்கலையுந்தப்பா வருமறையும் போற்றியுரைத்த பொருளெல்லாந் தோற்ற"வெனவும் "வேதப்பொருளாய் மிகவிளங்கி"யெனவும்"பாரதஞ்சீராமகதை மனுப்பண்டைமறை நேர்வன" வெனவும் "இந்நான்கு முன்பறியச் சொன்னமுதுமொழி நூலுள்ளவரிதென் றுலகங்கொள்ள மொழிந்தா" ரெனவும் "வேதவிழுப் பொருளையோத" வெனவும் "வேதப்பொருளைத்தமிழா லுரை செய்தா"ரெனவும் உரைத்தவாற்றான் மறையும் மறைப்பொருளின் முராணத்தோன்றிய பாரதம் சீராமகதைமனு அகப்பொருணூல்புறப்பொருணூல்முதலாய பிறவும்தாமே முழுதுணர்ந்துஅவற்றின்வழித்தாகச்செய்தாரென வழியுணரப்படும்.

"வையத்தாருள்ளுவவெல்லாமளந்தா"ரெனவும்"அகலிடத்தோரெலாந்தேர்ந்து தெளிய" வெனவும் "அகிலத்தோருள்ளிருணீக்குமொளி"யெனவும் "வானின்று மண்ணின்றளந்த" தெனவும் பிறவும் உரைத்தவாற்றான் இந்நூற்பொருள் முதனூலாகிய வேதப்பொரு

ளேயாகலானும் அம்முதனூல் வானுலகத்தும் வழங்கலானும் நூற்
பொருட்கெல்லேஇவ்வுலகேயன்றிஏனையஉலகுமாமென்பதூஉம் "மும்
மலே" முதலாய "தாமுடையமன்னர்தடமுடி மேற்ருரன்றே" என்ற
மையான்நூற்கெல்லே "வண்புகழ் மூவர்தண்பொழில் வரைப்" பாய
தமிழ்நாடாமென்பதூஉ முணரப்படும்.

"வள்ளுவன்வாய" தெனவும் "வள்ளுவன்வாய்ச் சொல்" லென
வும் "முப்பொரு" ளெனவும் "குறட்பா" வெனவும் "குற" ளெனவு
ம் "முப்பா" லெனவும் "பொய்யாமொழி" யெனவும் "வாய்மொழி"
யெனவும் "பிணக்கிலாமொழி" யெனவும் "வாயுறை வாழ்த்" தென
வும் "வள்ளுவர் வெண்பா" வெனவும் "குறள்வெண்பா" வெனவும்
'வள்ளுவனர்பொரு" ளெனவும் "உள்ளிருணீக்கும் விளக்"கெனவும்
"உள்ளக்கமலவெங்கதி" ரெனவும் "உள்ளிருணீக்கு மொளி" யென
வும் "வள்ளுவர்பாட்" டெனவும் பிறவுமுரைத்தமையான் நூற்பெய
ரும் பெருமையுமுணரப்படும்.

வள்ளுவர்சொல் வள்ளுவர்பாட்டு வள்ளுவர் பொருளென்றாற்
போலப்பிற்காலத்தார்திருவள்ளுவப்பயனெனவும்வழங்குப. "தொல்
காப்பியந் திருவள்ளுவர்கோவையார் மூன்றினு முழங்கு"மென்றார்.
சொற்பற்றி வள்ளுவரென்பது கருத்தனுக்கு பெயராய் நூலையுணர்த்
துமென்பாருமுளர்; அதுபொருந்தாமை தொல்காப்பியவிருத்தியுட்
காண்க.

"செய்யா மொழிக்கும் பொய்யாமொழிக்கும்பொருளொன்றே"
யெனவும் "ஆரியம்வேதமுடைத்துத் தமிழ்குறட்பாவுடைத்" தென
வும் "நான்முகத்தோன் றந்தநூ" லெனவும் "அந்தாமரை மேலயன்ற
ந்தா" னெனவுமுரைத்தமையான நூற்பெருமையுணரப்படும். "பர
ந்தபொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து திறந்தோறுஞ் சேரச்
சுருங்கியசொல்லால் விரித்துப்பொருள் விளக்கி" னாரென்றமையானு
ம்பிறவாற்றானுஞ் "சாற்றியபல்கலேயுந் தப்பாவருமறையும் போற்றி
யுரைத்த பொருளெல்லாந் தோற்ற" தொகுத்தியாத் தாரென
யாப்புணரப்படும்.

"முப்பாலினூற்பான் மொழிந்தவ" ரென்றமையானும் பிறவாற்
றானும் நுதலியபொருளறமுதனான்குமா மென்பதுணரப்படும்.

"நற்பலகையொக்கவிருக்கவுருத்திரசன்ம" ரென்றமையானும் "வள்ளுவனார்தம் வாயாற்கேளாதனவெல்லாங்கேட்டு" என்றமையானும் உருத்திரசன்மருஞ்சங்கப்புலவருங் கேட்டாரெனக்கேட் போருணரப்படும்.

"தமிழ்ப்புலவராய்க் கேட்கவீற்றிருக்கலா" மெனவும் "உள்ளமுருக்கு" மெனவும் "எப்பொருளும் யாரும் இயல்பினறியுற" வெனவும் "ஆய்தொறூஉறுமறி" வெனவும் "இம்மைமறுமையிரண்டுமெழுமைக்குச் செம்மை நெறியிற்றெளிவுபெறமும்மையின் வீடவற்றினுன்கின் விதிவழங்க" வெனவும் "உள்ளிருணீக்கு" மெனவும் "சிந்தைக்கினியசெவிக்கினியவாய்க்கினியவந்தவிரு வினைக்குமாமருந்து" எனவும் பிறவுமுரைத்தவாற்றுற் பயனுணரப்படும்.

கடைச்சங்கத்தார் பாடினமையான் அவரது காலமென்பதூஉம் உக்கிரப்பெருவழுதி பாடினமையான் அவனது காலமென்பதூஉமுணரப்படும்.

"இன்பம்பொருளறம் வீடென்னுமிந்நான்கு-முன்பறியச் சொன்னமுதுமொழிநூன்-மன்பதைகட்-குள்ளவரிதென் றவைவள்ளுவருலகங்-கொள்ளமொழிந்தார்குறள்" என்றமையானும்பிறவாற்றானும் காரணம் உணரப்படும். தன்னாசிரியன்முதலாயமூவருளொருவரன்றிப்பிறர்பலர் பாயிரங்கூறினர்; செய்யுளாதலின். குமாரதெய்வத்தின் கூறுக்மணிக்காலநிஞராகியவணிகர்மரபிற்றேன்றி அவையத்துய்த்துத்தலைவராய்க்கேட்ட உருத்திரசன்மர் சாபத்தால் வாய்வாளாமையுடையராகலிற் பாயிரங்கூறிற்றிலர்.

இந்நூல்சங்கத்தாரால் கீழ்க்கணக்கெனக்கொண்டு போற்றப்பட்டது. என்னை? "தலைச்சங்கம் இடைச்சங்கங்கடைச்சங்கமெனமூன்று சங்க மிரீஇயினர் பாண்டியர்கள்; அவற்றுட் கடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும் சேந்தம் பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும் நல்லந்துவனாரும் மருதனிள நாகனாரும் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின் மரென்ப. அவருள்ளிட்டுநானூற்று நாற்பத்தொன்பதின் மர்பாடினரென்ப. அவர்களாற்பாடப்பட்டன கூத்தும்

வரியும்பேரிசையும் சிற்றிசையும் பத்துப்பாட்டும்எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கு மென்றித்தொடக்கத்தன" வென்றுகளவிய லுரைப்பாயிரங்கூறியதுகொண்டுணரப்படுமாகலின்"நாலடிநான்மணி நானாற்பதைந்திணைமுப்-பால்கடுகங்கோவை பழமொழி-மாமூல-மி ன்னிலைசொல்காஞ்சியுட னேலாதியென்பவே-கைந்நிலையவாங் கீழ்க் கணக்கு" என்றாராகலின் பதினெண்கீழ்க்கணக்கினுள் முப்பாலாகிய குறளுமொன்றென்பதுணரப்படும்.

இனிக்கணக்கென்பது என்னையெனின் "மேல்கீழ்கணக்கெனவிரு வகைக்கணக்கே""மேற்கணக்கெனவுங்கீழ்க்கணக்கெனவும்பாற்படும் வகையாற் பகர்ந்தனர்கொளலே" எனவும், "அகவலுங்கலிப்பாவும் பரிபாடலும் பதிற்றைந்தாதி பதிற்றைம் பதீறுமிருத்துடன் றெருகுப் பதுமேற்கணக்கெனவும் வெள்ளைத்தொகையு மவ்வகையெண்பெறி னெள்ளறு கீழ்க்கணக்கெனவுங் கொளலே"என்றும்"ஐம்பதுமுதலா வைந்நூறீறு மையவகைப்பாவும் பொருணெறிமரபிற்-றொகுக்கப்படுவ து மேற்கணக்காகும்"என்றும் "அடிநிமிர்வில்லாச்செய்யுட்டொகுதி யறம்பொருளின் பமடுக்கியவ்வத்-திறம்படவுரைப்பதுகீழ்க்கணக்கா கும்" என்றுங்கூறுமாற்றானறிக. இனிக்கீழ்க்கணக்கிற்கு அவ்வகை யெண்பெறினென்றதல்லது இத்துணைத் தென்றுரையாமையானும் அடிநிமிர்வில்லாச் செய்யுட்டொகுதியென எண்ணின்றியுரைத்தமை யானும் இனியவைமுதலாயின ஐம்பதிற்குறைந்தும் இந்நூல், ஐந் நூற்றின்மிக்கும் வந்தனவென்க. இது சின்மென்மொழியாற் றாயப னுவலோடு அடிநிமிர்வின்றிச் செய்யப்பட்டமையின் அம்மையென வும்படும். என்னை,"சின்மென்மொழியாற் றாயபனுவலோ-டம்மைதா னேயடிநிமிர் வின்றே" என்றாராகலின். இனி முப்பாலெனப்பலர் பெயர் கூறினமையானும்"அறந்தகளியான்றபொருடிரியின்புஞ்சிறந்த நெய்" யென்றமையானும் இந்நூல்அறத்துப்பால் பொருட்பால் காம த்துப்பால் எனமுப்பாலுடைத்தென்றுணரப்படும்"முப்பாலினாற்பா ன்மொழிந்தவ" ரென்றும்"வீடொன்றுபாயிர"மென்றுங்கூறினமை யான்எனையவிட்டுப் பாலுந்துறவறமாகியகாரணத்தாலுணருமாறு அ றத்துப்பாலுட்பாயிரத்தினுந்துறவறத்திலுங்கூறப்பட்டதென்றுண ர்க. "ஐயாறுநூறுமதிகாரமூன்று"மெனவும்"ஆயிரத்துமுந்நூற்றுமு ப்பதருங்குறளு' மெனவும்'குறள்வெண்பாவிற்சிறந்திடுமுப்பா'லென

வுங்கூறுமாற்றான் இந்நூல்நூற்றுமுப்பத்துமூன்றதிகாரமும்ஒவ்வோரதிகாரத்துக்குப்பத்தாக ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள்வெண்பாவுமுடைத்தென் றுணரப்படும். சிறுமேதாவியாரும் மதுரைப்பெருமருதனாரும் பாடியபாட்டால் இந்நூலுள் அறத்துப்பால் முப்பத்தெட்டதிகாரமும் பொருட்பால்எழுபததிகாரமுங் காமத்துப்பால் இருபத்தைந்ததிகாரமுமுடைத் தென் றுணரப்படும். தொடித்தலைவிழுத்தண்டினார்பாட்டால் அறத்துப்பால் நான்கியலும் பொருட்பால் ஏழியலும் காமத்துப்பால்மூன்றியலுமுடையவெனவும் எறிச்சலூர் மலாடனார்பாட்டாற்பாயிரவியல் நான்கும் இல்லறவியலிருபதும் துறவறவியல் பதின்மூன்றும் ஊழியல் ஒன்றுமென அறத்துப்பால் முப்பத்தெட்டதிகாரமுடைத்தெனவும், போக்கியார் பாட்டால் அரசியில் இருபத்தைந்தும் அமைச்சியல்பத்தும் அரணியல் இரண்டும் பொருளியல் ஒன்றும் படையியல் இரண்டும் நட்பியல் பதினேழும் குடியியல் பதின்மூன்றுமெனப்பொருட்பால் எழுபததிகாரமுடைத் தெனவும், மோசி கீரனார் பாட்டால் ஆண்பாற்கூற்றியல் ஏழும் பெண்பாற் கூற்றியல் பன்னிரண்டும் இருபாற்கூற்றியல் ஆறுமெனக் காமத்துப்பால் இருபத்தைந்திகாரமுடைத்தெனவுமுணரப்படும். ஆசிரியர்க்கு முன்பு அவர் கருத்துணர்ந்து பாடிய நல்லிசைப் புலவருரைத்தன கொள்ளாது "தருமர்மணக்குடியார் தாமத்தர் நச்சர்-பரிமேலழகர் பருதி-திருமலையர், மல்லர்கவிப்பெருமாள் காளிங்க"ரென இந்நூற்குரை கண்ட பதின்மருட் பலர்தாந்தாம் வேண்டுமாற்றானே பொருட் பாலை மூன்றியல் எனவும் காமத்துப் பாலை யிரண்டிய லெனவும், அதனையே ஐந்தியலெனவும் பகுத்துரைகூறினார். இதுவன்றி ஒவ்வோரதிகாரத்தினும் முறைப்படுகின்ற குறட்பாக்களையுந் தாந் தாம் வேறு வேறு முறைகொண்டு, பிறழவைத்தார். அவையெல்லாம் ஆசிரியர் கருத்தன்றென்க. அப்பதின்மருரையுட் பலவிக்காலத்திறந்தன. இருப்பவற்றுட் பரிமேலழகருரையே சிறப்புடைத் தாகலின் அதனைக் காண்டிகையாகக்கொண்டு அவ்வுரையுட் பொருந் தாமைம றுத்து ஏனையவற்றோடு விரிப்பனவிரித்து இவ்வுரையெழுதப்படும்.

(இன்னும்வரும்)

அ. சண்முகம் பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பதவிளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது]

(முற்றொடர்ச்சி)

ஆனாயநாயனார் புராணம்.

(எ) கோடுகளி லிருக்கின்ற வண்டுகள் புறத்திலலைகின்ற சோலைகள் மேலேயோடுகின்ற சூரியன் தங்கும்படிவிளங்கிய மேன்மையையுடைய நல்லமழநாடாகிய அது பூமிக்கு ஓர் அருமையான ஆபரணமாக, மங்கலமானவை வாழ்கின்ற பழையஊரானது அதற்குஒரு மங்கலமாயிருந்தது; ஆகலான், அதுமங்கலமென்னும் பெயரையுடையது போலும்.

(அ) சிறப்பையுடைய அந்தமங்கலமென்னுமூர் உவமையற்ற பெரியகுடிகள் மிக்கதன்மையிற் குறையாமல் குற்றமற்றவளங்களைப் பெருக்கி, தருமத்தைப் புரிவிக்குங் குணத்தோடும், சொல்லுதற்குயர்ந்த சிறப்போடு பொலிந்தது. (அப்பதியில்) நிலையாக இருந்த இடையர்குலத்துள்ளவர் ஆனாயர்.

(கூ) தொழும்பு-பத்தி,தொண்டு. வினைப்பாலென்றது, வாயினாற்றுதித்தல், மெய்யினால் வணங்குதல், மனத்தாற் றியானித்தலாகிய தொழிற்பகுதிகளை.

(க0) பசுக்கூட்டங்களை ஒருசேர அகன்ற இடத்தையுடைய காட்டிற்கொடு சென்று, அக்காட்டிலுள்ள புலிமுதலிய தீயவிலங்குகளால் வருந்துன்பத்தைநீக்கி, எவ்விடங்களினும் சுத்தமாகிய நல்ல மென்மையுள்ள புல்லைத்தின்று, விரும்பியசுத்தமான நீரைப்பருகிக் கெடுதல்இல்லாத கூட்டமாய் அளவிறந்தன விருத்தியாகக் காப்பாற்றிவருகின்றவர்.

(கக) அநேக இடங்களோடு பலதொழுவங்கள், கன்றுகளும், பான்மறுத்த நாகுகளும், கறக்கின்றபசுக்களும், சிறியமயிருள்ள தலையினையுடைய மிருதுவாகிய சினைப்பசுக்களும், பெருமை பொருந்

*

திய ஈன்றணிய பசுக்களும், வெற்றிபொருந்திய எருத்துக்கூட்டங்களும், இனந்தோறும் வெவ்வேறாக நெருங்கிநிறைந்துள்ளன.

(கஉ) இடையர்குலத்தைப் பேணுகின்ற தலைவரானவர், சிவபெருமானுடைய திருவடிகளிலன்பை மிகுவிக்கும் கீதம்பொருந்திய துளைக்கருவியாகிய புல்லாங்குழலை வாசித்தலை மேற்கொண்டார்.

(கங) பழைய காந்தருவ வேதத்திற் சொல்லியவாறு முறைப்படி எழுந்த மூங்கிலின் நுனியில் நான்குபங்கும், அடியில் இரண்டுபங்கும் அரிந்து (நடுவிலுள்ள பாகத்தை யெடுத்துக்கொண்டு) நரம்புபொருந்திய இடங்களில் வந்த துளைகளை வரிசையாக்கி, முதலிற்காற்றுண்டாகுந்துளையையுமுண்டாக்கி, அழிவில்லாத சிறப்பையுடைய இடையீடு ஒவ்வோரங்குல அளவையாக உண்டாக்கி. இடையீடு—இடைவெளி.

(கச) முறையாகத் தொடுத்த ஏழுசுரங்களின் சுருதியானது பெறவாசித்து, வைக்கப்பட்ட சராசரங்களெல்லாந்தங்கும்படிவருகின்ற தமதுகிருபைபொருந்திய இசையாகிய அமுதத்தைக்கொடுத்து ஒழுகுகின்றார்.

(கரு) வாசனைபொருந்திய மலர்களாற் பிணைக்கப்பட்ட மாலையானது பிரகாசிக்க, மயிரைக்கோதி, பக்கத்துயர்ந்த ஒளிபொருந்தியமுடிக்கப்பட்டமயிர்முடியினெருக்கமாகக்கட்டப்பட்டிருக்கும் கண்ணிமாலையைச்செருகி, பசியஇலையையுடைய மிருதுவாகிய கொடியாகிய வடத்திற்பொருந்த நறுவிலியிலையைத்தரித்து, கருமைபொருந்தியகயிற்றினால் அதற்குப்பக்கத்திற் கருமையாய்ச் சுருளாயிருக்கும் பச்சிலையின் புறத்திற்கட்டி.

(கசு) வெண்காந்த ளிலைச்சுருளாலாயபசியதோட்டில் வாசனை பொருந்திய செங்காந்தளின் குளிர்ந்த அழகிய மலரைப் புனைந்த காதினொளியானது பிரகாசிக்க. ஒளிகண்டோர்கண்கோடணிறைந்து. ஒளியைக்கண்டோருடையகண்களைக்கொள்ளுதல்நிறைந்து. நிரம்பாத அழகுவிளங்க உடம்பின்மீது மதனைத்தரித்து;

(கஎ) அரையிலுடுத்த மரவுரியின் புறத்தே மரவில்லையான்மலிந்த தானையாகிய பொலிவாகிய பட்டுவஸ்திரம் பொலிந்தசைய.

(கக) காரென்னும் பருவமாகியபெண், நீலமயில்கூவ, வரிசையான கொடியையுடையமுல்லைநிலம் பாட, இந்திரகோபம் போன்ற வாயையும், அழகிய முல்லையரும்பு போன்ற பற்களையுங் காண்பிக்க, அசைகின்ற மின்போன்றஇடையும் சூழ்ந்தமாலையையுடையஸ்தனமும் அசையும்படிவந்தாள். இனிக் காருக்கியையக்கூறுங்கால், முல்லையானது தன்னிடத்தரும்புகளையும், இந்திர கோபங்களையுங் காட்டவும், அசைகின்ற மின்னிடையே சூழ்கின்ற மாலையிற்றேன்றும் முகிலலையவும் என்க.

(௨௦) பரப்ப—பரப்பும்படி. செம்மரல்—பெருகச்செய்தல்.

(௨௨) எவ்வுயிரையும் என்பினூடே கரைந்துருகச்செய்கின்ற இனியஇசையையுடையபுல்லாங்குழல்.

(௨௩) (ஒவ்வொருதுளைக்குப் புறத்தும் ஒவ்வொரு விரலளவு இடம்விட்டிருக்கும்) ஏழுதுவாரங்களைப் பொருந்திய இனிய இசையையுடைய வங்கியமென்னும் ஒருவகைப்புல்லாங்குழலையெடுத்து,மலரில்விழுகின்ற வரிபொருந்தியவண்டுகள் அந்த மலர்களின்றேதைப் பிடித்துக்கொண்டேதல் போல, நாற்புறமுங் குற்றமறச் சங்கீதத்தொனியானது நிறைய, கூறப்பட்டஇலக்கணந் தவறுமல் பெருமைபெற்ற புல்லாங் குழலினது துவாரத்தில்.

(௨௪) முத்திரையென்னுந்தானம் முதலாக முறையாகவுள்ள எல்லாத் தானங்களையுஞ் சோதித்து ஏற்படுத்தப்பட்ட துளைகளின் வழியே இராகசோதனையறிய விரல்களைச்செலுத்தி அந்தச்சுரங்களெல்லாம் ஒத்திசைக்கக்கண்டபின்னர், சட்சத்தினின்று வரிசையாக நிஷாதம்வரைக்கும் எச்சு, தக்குஎன்னும் இரண்டோசைகளையும் அந்தச்சுரங்கள் பெறும்படி அமைத்து, உயர்வான தகுதியாகப்பாடினார். ஆரோசை—ஆரோகணம். அமரோசை—அபரோகணம். வக்கரனைஎன்பது எல்லாராகங்களும் இந்த ஆறுதுவாரங்களினாலேயேபுண்டாகும்படி விரல்களாற் றுளைகளின் முன்னும்பின்னும் அழுத்தியும், மெலித்தும் சபஞ்செய்து சோதித்தல். முத்திரை-ஆரோகணமுறையில் இரண்டாந்துளை.

(உரு) மாறு-விஷமம். தாரம்-உச்சவிசை. அது மூக்கால் உண்டாவது. உழை—தலையை இடமாகவுடைய இசை. கொடிப்பாலைப்பண்ணுவது-நெஞ்சை இடமாகவுடைய இளிஎன்னும் பண்ணே குரலாக எழும்புவது. பட்டடை-அழுத்தம். தானம்-தானம்வழியாக.

(உசு) புகனுன்கு-ஸ்திதி, பிரக்கிரமம், சஞ்சாரம், மூர்ச்சனை. இசைத்துறையைந்து—ஆயத்தம், எடுப்பு, உற்கிரகம், சஞ்சாரம், இடாயம். கிளைகொள்ளுதல்-பிரிதல். ஆயத்தம் - மந்தரத்தினின்றும் அனுமந்தரமாகிய கீழ்ஸ்தாயிவரைக்குஞ் சென்று முன்ஸ்தானத்தில் வந்துமுடிவது. எடுப்பு—மந்தரத்திருந்து பஞ்சமசுரம்வரையும் போய்மீளவும் வந்துமுடிவது. உற்கிரகம்-மந்தரமுதற்கொண்டு தாரகஸ்தானம்-வரைக்கும்போய் மீளவும் மந்தரத்தில் வந்துமுடிவது. சஞ்சாரம்-மந்தரத்திருந்து மத்திமம் தாரகமாகிய இரண்டினும்போய் இறங்கிப் பின் கீழ்ஸ்தாயியான அனுமந்தரத்துஞ்சென்றுமீண்டும் மந்தரத்துவந்து நிற்பது. இடாயம்-மந்தரஸ்தானத்தையே முதன்மையாகச் செய்துகொண்டு மத்திமதாரகமாகிய இரண்டினுஞ் சென்று பின்பு மந்தரத்தையே வலியுறுத்திஅனுமந்தரத்திற்சென்று மீளவும் மந்தரத்தில் முடிவது.

(உஎ) தந்திரி-துளை; ஆகுபெயர். அந்தரம்-இடைகளில்.

(உஅ) மதுரமாகிய நாதத்தால்; பாணி-இராகமும், அதன்இயல்-மூர்ச்சனையும், தூக்கு-ஏற்றமும் விளம்பகதியின்உற்றுப் பொருந்த எழும்இசையை நாற்புறத்தும்பரவச்செய்தார். நடைமுதற்கதி-நடக்கின்றமுதற்கதியாகிய விளம்பகதி.

(௩0) அசைவிடல்-இரைமீட்டல். பானுரைபொருந்தும் வாயினுலேதாயின் முலையிற் கௌவுகின்ற இளங்கன்றுக்கூட்டங்களும்

(௩க) குறைவினையின்றுறை-குறைத்தொழிற்றுறை.

(௩உ) வருத்துவோரும் வருந்துவோரும் உணர்வு ஒன்றாக விரும்பலான்.

(௩ரு) ஒழிய—ஒழிந்து.

(ஙசு) உடம்பில்வாழும் புலன்களுங்கரணங்களும் பொருந்தி ஒன்றாயின.

(ஙஅ) காருதிகாரணர்—இசைக்கு முதற்காரணர்.

(ச0) அந்நின் றநிலை—பிறவித்துயர்.

(சஉ) சிவந்த சடையையுடைய நடராசரைத் திருச்செவியிற் பொருந்திய குண்டலங்கள் வீசுகின்ற காந்திபொருந்திய நிலவானது இருளைக்கெடுக்க, பரவையாருடைய ஊடலைநீக்க அவரில்லின்கணிரு முறைசெல்லத் தூதுகொண்ட சுந்தரமூர்த்தி நாயனாராம் நம்மை அடிமைகொண்டுரியவராக்குபவர்; ஆதலின், இனி யாம் தீவினைக்கு வாரேம்.

உ

திருச்சிற்றம்பலம்.

மூர்த்தி நாயனார் புராணம்.

(க) பாண்டிநாடானது, நிலைபெற்றசிறப்பையுடைய ஐசுவரிய முள்ளகுடிகள் நிறைந்திருத்தலால், சிறப்போடுயரும் மேகங்கள் தங் கியசிகரத்தையுடைய ஒளிபொருந்திய மாணிக்கங்கள் பதித்தமாடங் களில் (வாசஞ்செய்து) அன்புள்ளமனத்தையுடைய நல்லதுறைக ளையுடைய மானுடர்புகழ்கின்ற பூமியில் நிலையான பழையபுகழைப் பூண்டது.

(உ) நீருள்ளமுத்தம், தளிரைப்பெற்றிருத்தலால் சாய்கின்ற கொடிபோன்ற இடையையும்,நெடுமையும்அகலமுமானகண்களையும், மூங்கிலைவென்ற தோள்களையுமுடைய பெண்களது இசைபொருந்தி யஇனியசொல்லையுடைய சிவந்தவாயினுமுண்டாகும்; நீண்டகரை யோடு பூமியைஅரித்துக்கொண்டு செல்லும் குளிர்ந்த தாமிரபர்ணி நதிபாய்கின்ற கடலினுமுண்டாகும். வாயிற்படுமுத்த மென்றது பல்லை. பொருந்தம்—தாமிரபர்ணிநதி. நீர்மைபணித்தமுத்தம்—நீ ருள்ளமுத்து.

(௩) செவ்விமணஞ், செயிரத்தை,கூட்டமானவண்டினது நெருங்கியசூழல் ஒலித்த முகில்தவழ்கின்ற சந்தனச்சோலையையுடைய பொதியமலையானது தரவந்த மந்தத்தை உடம்பில்வைத்த காற்றுந் தரும்; பூமியையளந்த மேன்மையுடைய தெய்வத்தன்மைபொருந்திய தமிழுந்தரும். செவ்விமணஞ்செயிரத்தைக் காற்றிற்கியையக்கூறுங்கால், அழகியகுளிர்ந்தமணத்தை எனவும், தமிழிற்குக் கூறுங்கால் அழகுகலந்தசிவபத்தி எனவுங்கொள்க.

(௪) மதுராபுரியானது இதழ்சூழ்ந்த தாமரைப்பூவாக (எண்ணி) அம்மலரிதழில் வீற்றிருக்கும் இலக்குமியானவள் குறைவின்றி என்றும் ஒப்பற்றதன்மையோடு வாழத்தக்கது; அவ்விலக்குமிபோன்றபெண்களுடைய யாழ்போன்ற வார்த்தையிலும்,கூந்தலிலும் முறையேஇன்னிசையும், வண்டும் வாழ்கின்ற நகரமுமாம்.

(௫) செய்யுள் மிக்கேறு சங்கமானவை, பெருமைபொருந்திய இயலிசை நாடகம் என்னுமுத்தமிழுந்தங்கிய அழகாகியஇடத்தையுடைய அவ்வூரில் நூலைப்பயிற்சிசெய்யுமிடத்துமுள்ளன; பெரிய தலைகளையுடைய எருமைகள் பாய்தலால், பரந்தமுலையிற்சுரந்த பாலானது தேனையுடைய தாமரையிற்பாய, எவ்விடங்களினுஞ்சேல் மற்சங்கள் பாய்கின்ற தடாகத்துமுள்ளன. செய்யுண்மிக்கேறுசங்கமென்பது, முற்பொருட்குப் பாமிக்குயரும் புலவர்திரள் எனவும், பிற்பொருட்கு வயலுள் மிக்கூருகின்ற சங்குகள் எனவுங்கொள்ளப்படும்.

(௬) முத்துச்சேர்ந்த கோவைகள், தென்றலானது வந்துவீசுகின்ற பந்தரையுடைய மாடங்களின் முன்றில்களிற் பந்தடித்துவிளையாடுகின்ற தாமரைமலர்போன்ற சிவந்த கையையுடைய பெண்களது தாங்கப்படுகின்ற சந்தனக்குழம்பு நிறைந்த ஸ்தனங்களின் மேலுள்ளன; தாழ்ந்தகுண்டலங்களையுடைய ஒளிபொருந்திய முகமாகியசெந்தாமரையின் மேலுள்ளன; முகத்தில் சித்திலஞ் சேர்ந்த கோவை-வேர்வை.

(௭) உண்மைப்பொருளாகின்ற தமிழ்நூலிலே விளங்குகின்ற உண்மையையுடைய செம்மையாகிய அகப்பொருளிலக்கணத்தைத்

தருவாரும், திருவாலவாயில் எம்போல்பவரைப் பிறப்பினின்று நீக்குபவருமாகிய சோமசுந்தரக்கடவுள் முதற்புலவராக இருந்து ஏற்படுத்திய சங்கம் இருந்ததாயின், அந்தப்பழைய நகரமானது திரிபுவனங்களினும் மிக்கதன்றே.

(௯) பந்துக்களும், துணையுமுதலாகிய குறைவற்றபேறுகளெல்லாம் ஆட்கொண்ட பரமசிவனது பாததாமரையன்றிப் பிறிதில்லார். (மூதன்) மூர்த்தியார்—உடம்பையுடையவர்.

(௧௧) காட்டரண் சூழ்ந்த வடுகசாதியாளுகிய கருநாடதேசத்தார்களைக் காக்கும் வலிமைபொருந்தியபடைக்கலங்களையுடைய அரசன், பலாத்காரமாகப்பூமியைக்கைக்கொள்வானாய், யானை, குதிரை, சத்துருக்களைக் கொல்லுதற்கருவியாகியபடைக்கலங்களைத் தரித்தவீரர், திண்ணிய தேராகிய சேனைசமுத்திரம் என்னுமிவற்றைக்கொண்டு தென்றிசையை நோக்கிவந்தான்.

(௧௩) வலிய ஆண்மையால், தமிழ்நாட்டின் வளங்களையகப்படுத்தி, வில்வலிமையால் நெடியமேருவை வில்லாகவுடைய சிவனது அடிமைத்திறத்தைப் புலப்படுத்தும் திருநீறுதரித்தல் முதலியதொழிலைச்செய்யாது (உண்டு இல்லை) என்னுங் கோட்பாட்டையுடைய புறச்சமயமாகிய சமணர்களுடைய திறத்தில் மனம்வைத்தான்

(௧௪) அதுவன்றி—தான்பிரவேசித்த அதுவேயன்றி.

(௧௫) கருங்கற்போன்ற நெஞ்சையுடைய வஞ்சகனுகிய அரசன் வெவ்வியசமணர்களுடைய கூட்டத்திற்கு உட்படுத்தும் பொருட்டு அவருக்குஇகழத்தக்கவற்றைச் செய்யநினைத்து.

(௧௬) தங்கள் தங்களுடைய பெருமைக்களவாகிய சார்ச்சியினிற்கும்.

(௨௧) கல்லின்புறத்தேதேய்த்தமுழங்கை இரத்தஞ்சொரிந்து செல்லுமிடங்களெங்கும் எலும்புதிறந்து மூளைவெளிப்படுந் தன்மையைக்கண்டு சகித்தலிலராய்ச் சிவபெருமான் திருவாய்மலர்ந்த திருவாக்கு இடையிலெழுந்தது.

(உ௩) என்றிந்தப் பிரகாரமெழுந்ததை மூர்த்திநாயனர் கேட்டுப் பயந்தெழுந்து முன்னர்ச்செய்த திருத்தொண்டைவிட, தேய்ந்த புண்ணுலாய ஊறுநீங்கிக் கையி னழகுநிரம்பின, புலால் நாற்றம் நீங்கி, வாசமுழுவதுங்கலந்து கூட்டமாகிய அழகுவிளங்குகின்ற ஒளியைப் பொருந்தினர்.

(உ௪) சிவனடியாரல் லார்க்கு மின்னலைப் போலமிக்க உடம்பினது நிலையாமையானது மிக.

(உ௫) இந்தப்பிரகாரம் சரீரநிலையாமையையுடைய உலகத்தில்மிகஉயர்ந்த மேலோர் சிவலோகத்தில் விரைந்தணைவார்களல்லவா: அதுபோலச் சிவனடியாரை அலைவுசெய்த கருநாடதேயத்தரையன் கொடிய இடத்தையுடைய நரகத்தில் வீழ விரைந்திறந்தான்.

(உ௬) அவனைப்போன்ற இராக்காலமும்.

(உ௭) செய்வேறுவினை—செய்கின்றவேறுவினைகளை.

(உ௮) தாமதித்தலின்றிப் பொருளுங்குடியும் முதலாயவற்றின்கொள்கையை நாடு உடைத்தாயினும்.

(உ௯) பலவிதமான உயிர்களையெல்லாங் காத்துப் பூமியைக் காக்குமரசனது நெடியதவளசத்திரத்தின் நிழலின்கீழே தத்தமக்குரியவருணாச்சிரமங்களில் வழுவாது வாழுமுலகம், அவரையின்றிவாழுதல்.

(௩௨) மண்கொட்புற—பூமிநடுங்க.

(௩௩) எம்பெருமானருளிங்ஙனமாயின்.

(௩௪) வாழ்வைப்பொருந்த உலகஞ்செய்த தவத்தைப் போலச் சூழ்ந்த பொற்சுடரையுடைய பெரியகண்டாமணி நிலத்திற்பட.

(௩௭) வெள்ளிய ஒற்றைக்குடையின் கீழிருந்து அரசுரிமை செய்தற்கு முடிதரித்தற்குரிய செயல்களை யோசித்துச்செய்வார்கள்.

(௩௮) முடிசூடற்கியைந்த திக்கின்கணுள்ள மங்கலம்பொருந்திய ஆகுதியைச் செய்கின்ற ஓமகுண்டத்தில் நெருங்கிய ஒளியையு

டைய அக்கினியைவளர்த்து நெருங்கிய நூல்கள்சூழ்ந்த பொற்குடங்களிலும் கலசங்களிலும் நிரப்பிய சுத்தமான நீரைததியானிக்குஞ் செயலையுடைய மந்திரத்தை உச்சரிப்போர் நிறுத்தினர்.

(௩௯) சிந்தைச் சிவமேதெளியும்—மனத்திற் சிவத்தையே தெளிகின்ற.

(௪௧) அடையாளம்—உருத்திராக்ஷம்.

(௪௨) இப்பொழுது தேவரீர்செய்தஅருள்பிகநன்றென்று நல்லதவவேந்தருடையமனம் பொருந்தும் அரசாளும் உரிமைச்செயற் காவனவற்றைக் கொடுவந்தார்.

(௪௪) யானையினின்றுந் தாமாகஇறங்கி விளங்குகின்ற ஒளியையுடைய மண்டபத்துள்ள பொன்னாற் செய்யப்பட்ட சிங்காசனத்தில் சாமரையினதழகிய பொலிந்தகாற்று நிலைபெற்றதவளச்சத்திரநிழற்கீழ்ப் பூமியைத்தாங்கி இருந்தார்.

(௪௫) விளங்குகின்ற பலதுறைகளைப் பொருந்திய நீதியையுடைய அமைச்சர். செயலாய வற்றைக்களைந்து.

(௪௬) பாவங்களழிய உதவிசெய்கின்ற திருநீறு, பொருந்திய சடை, உயர்ச்சிபொருந்திய உருத்திராட்சமாலிகை, பொருந்தியசடையாகிய முதன்மைபொருந்திய மூன்றாலும்.

(௪௭) மயிர்ச்சாந்து கமழ்கின்ற கூந்தலையுடைய பெண்களினாசையை நீக்குகின்ற குணத்தை எக்காலத்திலும் பொருந்திக் கொடியபஞ்சப்புலன்களையும் பகைவரோடு வெற்றிகொண்டு நீக்கி அழித்து.

(௪௮) பரமன்னவர்-வேற்றரசர். எதம்பிணியாவகை-துன்பங்கலவாவண்ணம். தொண்டினபேதம்புரியா—தொண்டுக்குப்பேதத்தைச்செய்யாமல். இன் சாரிகை.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவப் பிள்ளை,

பனி.

பனிக்கட்டி உறைபனி இவற்றிலுள்ள அதிசயங்கள்.

இவ்வுலகமெங்கும் விசேடமாகப்பரவி நமக்கு மிகவும் சாதாரணமாயிருக்கின்ற நீரை உற்றுப்பார்த்தால் அனைவரும் கண்டு அதிசயிக்கத்தக்க வெகு விநோதமான பொருளாயிருக்கின்றது. நீர் இறுகித் தோய்ந்தால் பனிக்கட்டி முதலாகப் பலவிதமாகக் கட்டியாகின்றது; நீர் இயற்கையில் திரவமானது; நீர் அதிகமாய்ப் பொங்கினால் ஆவியாகின்றது. இப்படி நீரானது கட்டி, திரவம், ஆவி என மூன்றுவிதமாய் இருக்கிறதென்பது அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம். இப்போது நாம் சொல்லப்போவது பனிக்கட்டி முதலாகக் கட்டி வடிவமாயிருக்கும் நீரைப்பற்றியே. நீர் தோய்ந்து கட்டி கட்டுகிற விதம் ஒன்றல்ல; பலவுண்டு; அதனால் உறைபனி, மூடுபனி, பனிக்கட்டி, ஆலங்கட்டி என்று பல பனிவடிவங்கள் உண்டாகின்றன. இவையெல்லாம் முழுதும் தண்ணீரேயொழிய வேறல்ல. ஒன்று உண்டாகும் தண்ணீர்க்கும் மற்றவையுண்டாகும் தண்ணீர்க்கும் வேற்றுமை சிறிதும் இடையாது.

பனிகளுக்குள்ளே மிகவும் விசித்திரமான வடிவுள்ளதாகிய உறைபனி பூமிக்குமேல் சுமார் ஐந்து ஆறுமைல் உயரத்திலே வாயு மண்டலத்தில் உண்டாகின்றது. இப்படித்தானென்று அது நமக்கு நிச்சயமாய்த் தெரியாதெனினும், வாயுமண்டலத்தில் அதிகக்குளிர்ச்சியானவிடத்திற்கு மேகம் வாயுவினால் தள்ளுண்டுபோம்போது தான் இவ்வுறைபனி உண்டாகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. மேகம் உண்டாகிறவிதம் இப்படியென்று அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். நீராவியந்திரங்களிலிருந்து புகை கிளம்புகின்றதே: அது தான் மேகம் உண்டாவதற்கு முதல். அந்தப் புகை ஆகாயத்தில் அதிகக் குளிர்ச்சியானவிடத்தில் செல்லும்போது தானும் நன்றாய்க் குளிர்ந்துபோக, அதிலுள்ளநீராவி இறுகுகின்றது; அஃதாவது, சிறு சிறு நீர்த்துளிகளாகின்றது. அந்த நீர்த்துளி வரவர இன்னும் அதிகமாய்க் குளிர்ந்து உறைந்து சிறிய பனிக்கட்டியாகின்றது. பின்னும்

குளிர்ந்த நீர்த்துளிகள் பல சிறிதுசிறிதாய் அச்சிறு பனிக்கட்டியைச் சுற்றிவந்தடைய, அளவிலே அச்சிறுகட்டி பருத்துக் கண்ணுக்குப் புலப்படும்படியாகின்றது. கடைசியில் காற்று தாங்கமாட்டாதவளவு பருத்துப்போனால், உடனே அது வாயுமண்டலத்திலிருந்து உறைபனி வடிவமாய்த் தரையில் வந்து விழுகின்றது. அவ்வுறைபனிக் கட்டிகளுக்கு வடிவம் ஏற்படுகிறவிதம் மிகவும் அதிசயமானது. அவை சுற்றிலும் ஒரே அளவாய் வட்டமாகக்கட்டிகட்டுவதில்லை; ஒவ்வொருபுறத்திலேயே வெகு சீக்கிரமாய்க் கட்டுகின்றன; எப்போதும் உறைபனி உண்டாகிறவிதம் இப்படியே. அதனால் பனிக்கட்டிகளின் வடிவம் பலவிதமாயிருப்பினும் அவற்றில் அமைந்திருக்கும் அலங்காரம் மட்டும் ஒரேவிதமாகவே காணப்படுகின்றது. அஃதாவது, எல்லாம் ஆறிதழ்மலர்வடிவமாகவே காணப்படுகின்றன.

இந்த உறைபனிப் பூக்கள் உண்டாகும் விதம் இப்படியென்று நாமே ஒருவாறு உத்தேசிக்கலாம். பனி உறையும்போது சிறு சிறு பனித்துளிகள் அதனதன் இயற்கைக்கேற்றபடி ஆறுகோண வடிவமாகவே ஒன்றேடொன்று வந்தடைந்து இறுகுகின்றன. அப்படிப்பட்டவை பல மேன்மேலும் அந்த ஆறுகோணங்களிலேயே வந்தடைந்து கடைசியில் நாநாவிதமான ஆறிதழ்ப் பனிப்பூக்களாக உருவமைத்துக்கொள்கின்றன. தெய்வச்செயலால் இவ்வுலகத்தில் உண்டாகும் அநேகம் அற்புதங்களுள் இதுவும் ஒன்று. ஆ ஆ, கடவுளுடைய விசித்திரசக்தியை நாம் என்னென்று சொல்லலாம்!

பூதக்கண்ணாடியைக் கொண்டுபார்த்தால் பனிக்கட்டிகளில் அற்புதமான அலங்காரங்கள் தெளிவாய்த் தோன்றும். ஒவ்வொருசமயத்தில் முக்கோணவடிவமாயும் உறைபனிப்பூக்கள் உண்டாவதுண்டு; ஆனால் அப்படி உண்டாவது மிகவும் அருமை.

இப்படிமேற்சொன்னவிதமாகவே உறைபனி உண்டாகிறதென்பதை நாம் எளிதில் திருஷ்டாந்தமூலமாயும் தெரிந்துகொள்ளக்கூடும். மழைநாளில் காலேயிலே கண்ணாடிபில்லேயில் மூச்சுவிட்டு என்ன நடக்கிறதோவென்று பாருங்கள். உடனே அக்கண்ணாடியில் இரண்டோரிடத்தில் மாசுபடிந்து கண்ணாடியொளியை மறைக்

கின்றது. பின்பு வெகு சீக்கிரமாய் அவ்விடத்தைச் சுற்றி ஒரு வித இலைவடிவமாய் அழகான மப்புப்படரும். அவை வரவர முழுதும் பரவி, அக்கண்ணாடியெல்லாம் ஒரே அளவாய் அலங்கரிக்கப்பட்டதுபோலாகும். இப்படிக் கண்ணாடியிற்படிந்த மலர்வடிவமான மப்பின்மேல் உறைபனிப்பூவொன்றை எடுத்துவைப்போமானால் இரண்டுருவத்தின் அலங்காரமும் ஒன்றாய்ப் பொருந்தியிருக்கக் காண்போம். இவ்விரண்டும் உண்டாகும்வழி ஒன்றேயாகையால் அப்படியாகின்றது.

இவ்விதமான உறைபனியைப்போலல்லாமல் பனிக்கட்டி கண்ணாடியில்லைபோல் ஒரேமொத்தமாயிருப்பதாகக் காணப்படுகின்றது. அதில் புரைகளிருக்குமென்று ஒருவரும் சந்தேகிக்கமாட்டார்கள்; ஆயினும் அது வாஸ்தவத்தில அப்படியில்லை. ஒரு பனிக்கட்டித் துண்டை மாயாதீபத்தில் (Magic-Lantern.) வைத்துப் பார்ப்போமானால் அப்போது அதிலுள்ள அற்புதங்கள் நன்றாய்த் தெரியவரும். மாயாதீபத்தில் வைத்துப் பார்க்கும்போது முதலில் அந்தத் துண்டின் பலவிடங்களில் ஆறுகோணமுள்ள நக்ஷத்திரம் போலப் பல விசித்திரமான உருவங்கள் தோன்றும். வரவர அவை மிகப் பெரியவையாகும். உடனே அந்த ஒவ்வொரு நக்ஷத்திர உருவத்தின் மத்தியிலும் வட்டமாய் முத்துப்போல் மிகப் பளபளப்பான சிற்றுருவமொன்று காணப்படும். இப்படியாக அந்த நக்ஷத்திர உருவங்களெல்லாம கொஞ்சங்கொஞ்சமாய் அகன்று கடைசியில் அவையெல்லாம் ஒன்றோடொன்று பின்னலிட்டதுபோன்று அந்தத் துண்டுமுழுதும் பரவி வெகு விநோதமாய்த் தோன்றக்காண்போம். ஆகாயத்தில் ஐந்தாறுமைல்தூரத்தில் நீர் உறைவதுமாத்திரமேயன்றித் தரையிலும் புற்களின்மேலும் இலைகளின்மேலும் பனிகட்டுவதுண்டு. அப்படி உறைந்தபனியிலும் ஆறுமூலையான நக்ஷத்திரவடிவங்கள் அநேகம் தெளிவாய்த் தோன்றும். ஆதலால் இந்தப் பலவிதமான பனியுறைக்கட்டிகளும் ஒரேவிதமான கோட்பாட்டைக்கொண்டே உருவமைக்கப்படுகின்றனவெனத் தோன்றுகிறது.

இனிக் கடைசியாய் விசாரிக்கவேண்டுவது ஆலங்கட்டியென்பது ஒன்றுமிருந்திருக்கிறது. ஆலங்கட்டியைப் பாதியில் அரி

ந்துபார்த்தால், வெங்காயப்புரைபோல் ஒன்றின்மேலொன்றாய்ப் பல புரைகள்சேர்ந்து அஃது உண்டானதென்று நன்றாய்த் தெரிய வரும். அவற்றுள் சில புரைகள் பனிக்கட்டியின் தன்மையுள்ளன வாயும் வேறுசில உறைபனியின் தன்மையுள்ளனவாயுமிருக்கும். அஃதாவது, பனிக்கட்டியின் தன்மையுடையனவெல்லாம் கண்ணாடி போல் தெளிவாயிருக்கும். உறைபனியின் தன்மையுள்ளனவெல்லாம் தெளிவற்று மந்தமாயிருக்கும். ஆதலால் ஒவ்வொரு புரைக்கும் வேற்றுமை விசதமாய்த் தெரியவரும்.

இப்படிப் பலவிதமான பனிக்கட்டிகளும் கோடாகோடியளவாய் உலகில் உண்டாகின்றனவென்றாலும், அவற்றுள் ஒவ்வொரு துளியும் இவ்விதமான விசித்திராலங்காரத்தோடேயே அமைக்கப்படுகின்றதென்றால் இது எவ்வளவு அதிசயமானது! உத்தரதுருவம் தக்ஷிணதுருவம் இவற்றின் அருகே உண்டாகிப் பூமிமுழுதும் கவர்ந்துகொண்டிருக்கிற பனிக்கட்டியும் உறைபனியும் இவ்வளவென்று அளவிட்டுச்சொல்ல எவராலுமாகாது. சமுத்திரமுகமாய்ப்பார்த்தாலும் தரைமுகமாய்ப்பார்த்தாலும் எந்தத்திசையிலும் கண்ணுக்கெட்டினதூரம் மேலே கெட்டியாய் உறைபனிபடர்ந்த பனிக்கட்டிகள் மலைமலையாய்த்தோன்றும். மரங்கள் மலைகள் ஒன்றும் கண்ணுக்குப் புலப்படாது. தக்ஷிணதுருவத்தினருகே பனிப்பாறைகள் பூமியிலிருந்து கால்மைல் உயரமுயர்ந்து கணவாய்களையெல்லாம் தூர்த்து மலைகளையெல்லாம் மூடிப் பூமிமுழுதும் ஒரேசமமான வெட்டவெளியாகச் செய்திருக்கின்றன. கோடைகாலம் துவக்கினால் அங்கே இடிமுழக்கம்போலப் பயங்கரமான சத்தமொன்று உண்டாகின்றது. உடனே சமுத்திரம் உல்லோல கல்லோலப்படுகின்றது. பின்பு மலைமலையாய்ப் பனிக்கட்டிகள் புரண்டுவந்து கடலிற்சேர்ந்து உஷ்ணமானவிடம்நோக்கி மிதந்துபோகின்றன. அந்தப் பனிக்கட்டிகளுக்கு பனிப்பாறைகள் (icebergs) என்றுபெயர். அவையெல்லாம் அங்கிருக்கும் பெரிய பனிக்கட்டி ஆறுகளினின்றும் பெயர்ந்து வந்த சிறுதுண்டுகளேயொழிய வேறல்ல. இப்பனிக்கட்டியாறுகளால் பக்கங்களில் கிராமபூமிகளுள்ள பலவிடங்களிலும் உண்டாகிற அழிவு இவ்வளவவ்வளவன்று. சீதகாலத்தில் அப்படியே மலைமலையாய்க் கட்டிப்போன பனிகள் கொஞ்சம் சூடு

கொண்டவுடனே இடம்பெயர்ந்து பாறைபாறையாகப் புரண்டு பெருகிவந்து அண்டையிலுள்ளவைகளின்மேற்பாய்ந்து யாவையும் அழிக்கின்றன. இமாலயம் முதலியவிடங்களில் இப்பனிப் பாறைகள் உஷ்ணகாலத்தில் உருகிச் சிறிதும் மழையில்லாத கோடையிலும் நதிகள் பிரவகிப்பதற்கு ஏதுவாகின்றன.

யாவரும் சாதாரணமென்று நினைத்திருக்கின்றதண்ணீரில் இவ்வளவு புதுமைகள் இருக்கின்றனவென்று இப்போது சொல்லக் கேட்டபோது, நம்மைச் சுற்றியிருக்கும் பொருள்கள் நமது மேற்பார்வைக்கு மிகவும் அற்பமாய்த் தோன்றினும் அவை ஒவ்வொன்றிலும் இப்படியே ஒவ்வோர் அற்புதமும் உபயோகமும் அமைந்திருக்குமென்றும், அதனால் நாம் சிறிதும் அலக்ஷியம் செய்யத்தக்கன வல்லவென்றும் தெளிவாகின்றதல்லவா? (ஜனவிநோதினி.)

(I.) மூடுபனி.

நமது நாட்டில் மார்கழி, தை மாதங்களில் மழை ஓய்ந்து குளிர் மிகுந்து பூமி யெங்கும் பனியால் மூடப்பட்டிருப்பதைக் காணலாம். அதை மூடுபனி யென்பர். அவ்வகைப்பனியினால் நமக்குச் சாதாரண காலங்களிற் றோன்றக்கூடியவை யாவும் மறையக்கூடியவையாயுள்ளன. இத்தகைய பனி ஓர் மாதத்தில் இராக்காலத்தில் சூரியாஸ்தமனத்தில் முன்னதாகவே உண்டாகவும், மற்றொரு மாத காலத்தில் இராக்காலத்தில் வெகு நேரத்திற்கப்புறம் தோன்றவும் பார்க்கிறோம். ஆதலால் காலத்திற் கேற்றபடி முன் பனி காலமேன்றும் பின்பனிக்கால மென்றுங் கூறிவருவர்.

பனியுண்டாவதற்குக் காரணமென்ன வென்று ஒருவாறு யோசிப்போம். யாதொரு காலத்தில் சூரியனது வெப்பம் குறையக் குளிர் அதிகரிக்கின்றதோ அப்பொழுதே நீராவியானது கனீகரணத்தினால் கனமடைவதாகப் பார்த்துளோம். மற்றும் ஆகாயத்தின் கட் பரவியுள்ள பலவகை அணுப்பிரமாண தூசிகள் அளவிறந்தன.

அவை யெல்லாம் ஆகாயத்தின்கண் அசைவற்றுத் தங்குவனவாம். இவ்வணுக்கள் குளிர்காலத்தில் குளிர்ச்சி யடைந்து காற்றின்க ணுள்ள நீராவியிற் பொருந்துவதால் நீராவியானது ஒவ்வோரணு வையுஞ்சுற்றிக் கனீகரணத்தினால் உறைந்து தூளைச்சுற்றிப் படிவ தாயுள்ளது. இவ்வகை படியப்பெற்ற தூள்கள் பலசேர்ந்து மூடு பனியாகத் தோன்றுவனவாம்.

பூமிக்கு வெகுதூரம் வானத்தின்கண் எவ்வித மேகமுண்டாகு மோ அவ்விதமே பூமிக்கருகில் ஆகாயத்தின்கண் பனியுமுண் டாகின்றது. மழை பெய்வதைப்போல, பனியையும் பெய்வதாகச் சொல்வது வழக்கம். ஆனால் மழைபெய்யப் பார்க்கிறோம். பனி சூரியனது கிரணத்திற் கரைந்துமறையப் பார்க்கிறோம். நமதுபோர் வைகள் மழையில் நனைவது போலவே பனியிலும் நனைகின்றன. ஆனால் போர்வையில் மழை நீர் வெகுவாய் ஊறுவதுபோலப் பனி ஊறுவதில்லை.

குளிர்காலத்தில் நமது வாயினின்று வெளியாகும் சுவாசம் புகைபோல் கிளம்புகிறது. மேலும் குதிரைகள் தும்மியக்கால் ஓர்வித வெண்புகை அவ்வாறே கிளம்புகிறது. ஏனெனில், சுவா சத்துடன் கலந்துள்ள ஈரமானது கனீகரணத்தினால் உறைந்து கண் ணுக்குப் புலப்படத்தக்கது. தூள்களின் மேற்படியும் பனியினது வெண்ணிறத்திற்கு இதுவே காரணமாகும்.

(2) பனி நீர்த்துளி.

பின்பனி கழிந்து வருவதை தை, மாசி மாதங்களில் காலையில் சூரியன் கிழக்கே பிரகாசித்துக்கொண்டு உதிக்குங்கால் புற்பூண்டுக ளால் கவரப்பெற்ற பூமியின்மீது நீர்த்துளிகள் ஜொலித்துப் பிர காசிக்கக் காணலாம். இவ்வகை நீர்த்துளிகள் பனிநீர்த்துளிக ளாம். இத்துளிகள் எவ்வாறுண்டாகின்றன? மூடுபனித்தூள்களி னின்றும் பனிநீர்த்துளிகளில் எது ஒத்திருக்கின்றது? எது வே றுபட்டுளது? இவ்விஷயங்களைச்சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

தை, மாசி, மாதகாலங்களில் மழையோய்ந்து பூமி குளிர்வ டைந்துள்ளது. காலை முழுதும் காயுஞ் சூரியனது வெப்பம் பூமி

யின் மேற்படப் பூமியானது வெப்பங் கொண்டபோதிலும், வானமானது சுத்தவெளியாய் மேகமற்றிருக்குங்கால் இராக்காலங்களில் பூமியானது கொண்டவெப்பம்யாவற்றையும் நுண்ணிய இரேகைகளால் மேலேவிடுகின்றன. ஓர் பொருள் உஷ்ணமாயிருப்பின் அப்பொருளைக் காற்று மட்டுப்பட்ட விடத்தில் வைத்தபோதிலும் காலவளவில் உஷ்ணத்தையிழக்கத் தக்கதாயுள்ளது. இதன் காரணமென்னவெனில் மேற்கூறிய இரேகை மார்க்கமேதான் பொருள்கள் ஏற்றபடி வெப்பத்தைச்செலுத்தக்கூடியவை. ஓர் இரும்புக்கரண்டியை ஓர் முனையிற் காய்ச்சினால் மற்றோர்முனை விரைவில் சுடத்தக்கதாயுள்ளது. இஃது இரும்பினது வெப்பத்தைச்செலுத்துஞ் சக்தியினாலுண்டாகியது. (conduction of heat) ஓரிரும்பைக்காய்ச்சிச் சற்று ஆறவைத்திருப்பின், அதன் வெப்பமானது நுண்ணிய இரேகைகளாக வெற்றிடத்திற் பரவவல்லதேயாம். இத்தகைய வெப்பமிழத்தலானது ரேகைமார்க்கமாயுண்டானதாகச் சொல்லுவர். (Loso of heat by radiction.) இதேகாரணம்பற்றி, பூமியினால்ஆகர்ஷிக்கப்பட்டுள்ள சூரியவெப்பமானதுஇராக்காலங்களில் விடுதலையடைவதாயறியலாகும். ஆனால் வானத்தின்கண் மேகம் பரவியிருப்பின் பூமியினின்று மேலெழும் வெப்பமானது தாக்கப்பெற்றுக்காற்றிற் பரவுவதாயுள்ளது. இவ்வெப்பமானது மேகத்தினால் பிரதிபலிக்கவுங் கூடும், ஆதலால் இரேகையாக வெப்பம் விடுதலையடையும் பொருட்டு வானத்தில் மேகங்கூடலாகாதென்று சொல்லிவந்தோம். பூமியினது வெப்பம் இரேகையாக வெளியானால் பூமி குளிர்வையடைகின்றது. ஆதலால் பூமியின் மேல் தாக்குண்டயாவுங் குளிர்வையடைகின்றன. பூமியினிடம் பரவியுள்ள புற்களும் புஷ்பங்களும் இயல்பாகவே வெப்பத்தை இழப்பவையாகவுள்ளன. ஆதலால் வெப்பமிழந்து குளிர்வையடைந்துள்ள பூமியின்மீது புற்கள் தங்கினால் புற்களைச்சுற்றியுள்ள காற்றினது நீராவியானது கனீகரணத்தினால் நீர்த்துளிகளாகப்புல்லின்மேலமைகின்றது. இத்துளிகளைப்பனிநீர்த்துளிகளென்று கூறுகின்றோம். புஷ்பங்களின் மீது மித்துளிகளைக் காணக்கூடும். ரோஜா புஷ்பத்தின்மீது இத்துளிகள் படிந்திருப்பின் அப்பூ ஓர்வகைக்குளிர்ச்சியும் பொலிவுமடைந்து நமக்கோரானந்தத்தை விளைவிக்கின்றது.

கனீகரணத்தினல் காற்றினது நீராவியானது பனியாகவுறைந்து தூள்களின்மேற்படிய மூடுபனியை யடைகிறோம்: அத்தூள்களின்றிப் பனி நீர்த்துளிகளுண்டாகின்றன. மற்றும் பனி நீர்த்துளியின் தன்மை மூடுபனியினும் ஜலத்தன்மை யடைந்துள்ளது, அதாவது பனிநீர்த்துளியானது மூடுபனியைப்போல் கனம் அடைந்ததில்லை.

ஓர் துணியைச்சற்று நீரில் நனைத்தால் நீரையுட்கொள்ளுகிறது. அதையே அதிக நீரில் நனைத்தால் வேண்டுமளவு உட்கொண்டு மிகுதியை விலக்கிவிடுகிறது. வேண்டுமளவு நீரை உட்கொள்ளுதலை நிறைவு என்று (Saturation) கூறுவர். ஆதலால் காற்றனது எவ்வளவு நீரை உட்கொள்ளுமோ அவ்வளவையுமுட்கொண்டபின் மிகுதியை விலக்கவல்லது. ஆதலாற்றான் மேகமிருந்தும் மழையில்லாமைக்கு மற்றுமோர் காரணத்தைப் பார்க்கிறோம். காற்றினது நீர் நிறைவுக்கு அதிகப்பட்ட நீரை யாப் பெறவல்லோம். நீராவியானது எப்பொழுதும் காலத்திற்கேற்றபடி யுண்டாவதாகையால் காற்றில் எப்பொழுதும் சற்று நீர் கலந்துள்ளது. அத்தகைய நீர் நிறைவின்பொருட்டுக் காற்றிலதிகரிப்பின் பனிநீர்த்துளியும் விரைவிலுண்டாம். அது குறையின் இதுவுங்குறுகும்.

ஆதலால், காற்றினது நீர்நிறைவிற்கேற்றபடி பனி நீர்த்துளிகளாதலைக்காண்கிறோம். காற்றினது வெப்பம் (Temperature) சிலகாலங்களில் சற்றேறக்குறைய ஒரே நிலைமையிலிருந்த போதிலும் நீராவியினலாகும் காற்றினது நீர் நிறைவுக்குத்தக்கபடியே பனி நீர்த்துளிகளுண்டாகக் கூடியவெப்பத்தினதளவு மாறுபடும். ஓர் காலத்தில் காற்றின்கண் வெப்பம் ஒன்றுகவிருந்து பனி நீர்த்துளிகளுண்டாகக்கூடிய வெப்பம் மற்றென்றும், மற்றோர் காலத்தில் காற்றினது வெப்பமவ்வளவேயிருந்து பனி நீர்த்துளிகளுண்டாகத்தக்க வெப்பம் மாறுபடலாம். இவ்விஷயம் சரி வரவுணர்ந்து கவனிக்கத்தக்கது.

காற்றினது நீர்நிறைவையும் பனி நீர்த்தூள்களாகவல்ல வெப்பவளவையும் காலத்திற்கேற்றபடி பரிசோதித்துவர வெப்பமளக்குங்கருவிகளிரண்டைக்கொண்டு நிறுத்துப்பார்த்து வருவர். இவ்வித

முபயோகமாந் தனிக்கருவிக்கு காற்றின் நீர் நிறை யளக்குங் கருவி யென்று பெயர். (Hygromater.)

இதுவரையிலும் படித்து வந்த மேகம், மூடுபனி, மழை, பனி நீர்த்துளி, ஆகிய இவைகளை விட்டு அவ்வத்தேய சீதோஷ்ணஸ்திதி, தேயவியல்புகளுக்குத் தக்கபடி நீரானது மற்றும் வேற்றுமையடைந்து காணத்தக்கது. அவைகளை அடியில் வருமாறு சுருக்கிச்சொல்வோம்.

ஆலங்கட்டி. (Hail)

இதைக் கோடைகாலத்தில்மேகந்திரண்டு மின்னலும்இடியுமாக வேகத்துடன் பரவிச்செல்லுங்கால் சிலவேளைகளிற் பார்க்கலாம். ஆலங்கட்டி உருண்டையாயும், வேறுவிதமாயும், ஒருசிறு கல்லினளவுமுதல் கோழிமுட்டையினளவு ஈறாகப் பலவிதமான பிரமாணங்களைக் கொண்டுள்ளது. இவ்வகைத்தன்மை மேகத்தின் கணுண்டாம் மின்சார வேகத்தினாலுண்டாவது.

நீர்மேற்படியும் பனி. (Frost)

காற்றடிக்கும்போது காற்றினது நீராவியானது குளங்கள் முதலிய வற்றிலுள்ள நீரின்மேற்பட்டுக்கனத்தையடைந்து அந்நீர் நிலையின் பேரிலேயே பனியாய்த்தங்குவது. மற்றும வடமகாசமுத்திரத்தின்கண் (Arctic Ocion) அதிக குளிரினாலுறைந்துள்ள பனிக்கட்டிமலைகளின்மேல் (Ice bergs) காற்றினது நீராவிதாக்க நீராவியானது கனத்தையடைந்து புகைபோல் பரவியுள்ளது.

இமம் அல்லது உறைபனி. (Snow)

வெகு உயரமாயுள்ள மலைகளின்மேல் காற்றினது நீராவியானது உறைந்து படிந்துள்ளது. இதை இமம் அல்லது உறைபனியென்பர். இதை இமயமலையிற் காணலாம். இவ்விமயம் கோடைகாலத்திலுருகி வடிந்து, (Ice Indus) கங்கை (Ice Ganges) நதிகளுக்கு நீரை யூட்டுவதாகும்.

செ. வி. இராஜகோபாலாசாரியார்.

சீவகசிந்தாமணியுரை.

செந்தமிழ்ப்பாஷையிலுள்ள இலக்கியங்களைக்கற்பவர்களுக்குச் சீவகசிந்தாமணியும் உரையும் பெருந்துணையாய் உதவி செய்யும் என்று பலருங் கூறக்கேட்டுச் சீவகசிந்தாமணியுரைப் புத்தகம் ஒன்று வாங்கிப்படித்துவருகின்றேன். அப்புத்தகம் மஹாமஹோபாத்தியாயர் வே. சாமிநாதையாவர்கள் பரிசோதித்துப் பதிப்பித்த பதிப்பு. அதன்கண் நூதனமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் விஷயங்கள் ஐயரவர்களுடைய நூற்பயிற்சியையும் பிரயாசத்தையுங் காண்பிக்கின்றன. படித்துச் செல்லும்போது எனக்குத் தோன்றிய ஐயங்களோ எண்ணிலாதன. ஐயரவர்களாவது மற்றைத் தமிழ்ப்புலவர்களாவது பரோபகாரமாக ஐயப்பாடுகளை நீக்குவார்கள் என்று கருதி அவற்றுள்ளே சிலவற்றை இப்போது வரைகின்றேன்.

க. முதற்செய்யுளாகிய "மூவாமுதலா" என்பதனுரையிலே வருகின்ற "இச்செய்யுட்களின் ஓசை வேற்றுமையும் மிக்குங்குறைந்தும் வருவனவும் கலிக்கே யேற்றலிற் கொச்சக மென்றடங்கின" என்னும் வாக்கியம் புலப்படவில்லை. அடங்கின என்பதற்கு வினைமுதல்யாது? மிக்குங் குறைந்தும் என்பவற்றிற்கு வினைமுதல் யாது?

பதிகத்திலே "முந்நீர்ப்படு சங் கலறம்முரசார்ப்ப மூதூர்ச்-செந்நீர்க்கடியின் விழவாட்டினுள்" என்பதனுரையிலே "அலற ஆர்ப்ப விளையாடும் விளையாட்டென்க" என்ற உரை கவியிலுள்ள வினைமுடிபுகளை இயைவித்துக் காட்டியதன்றோ? விளையாட்டென்பது கவியில் இல்லைதயாகவும் இங்ஙனங் கூறியது என்னை?

௨. நாமகளிலம்பகத்திலே ௩௩-ம் கவியிலே "கவ்வையுங்கடும் புனலொலியுங் காப்பவர் - செவ்வனூறுயிரஞ்சிலைக்கும் பம்பையும்" என்பதனுரையாகிய "படவிட்டதினின்றுங் குதித்து வழிஇயபுனலொலியும், கரைகாப்பாருடைய கவ்வையும், பறையொலியும்' என்பதிலே காப்பவர் என்பதனிறுதியிலே ஆறுவது தொகுவதும் கவ்வை என்பதனை அதன் பின் சேர்ப்பதும் இலக்கணவிதிக்கு இயையு

மா? ஆறும் வேற்றுமை இறுதியிலே தொகுவதற்கு விதி யாது? தொல்காப்பியர்இறுதியிலேதொகாதுஎன்பர்."படலிட்டதினின்றும்" என்பது முதலிய உரைக்குரிய சொல் கவியிலுண்டா? இல்லையா?

௪. மேற்படி இலம்பகத்திலே ௬௨-ம் பாட்டிலே "கலத்துயர் கூம்பின் மேலாடுங் கவவைத்தே' என்புழி 'கவவைத்து' என்பதனுரையும் 'கவ்வைத்து' என்றே வரையப்பட்டது, அரும்பதப்பொருளிலுங் காணப்படவில்லை. கவ்வை என்பதன் பொருள்யாது?

௫. மேற்படி இலம்பகத்திலே, ௭௧-ம் கவியில் "முகிறழீஇ" என்பதற்கு"மஞ்சைத்தன்னிடத்தேஅணைத்த"என்பது பொருந்துமா? அஃது இரண்டாம் வேற்றுமைத்தொகையாயின் "பட்டவர்த்தப் பலின்"என்பதிற்போல வலி மிகவேண்டாமோ?

௬. ௮௨-ம் கவியிலும் "இரவை யுண்டாக்க" என்னும்உரையின் மூலமாகிய "இரவுசெய்ய" என்பது வலிமிகாததென்னை? மேலும் "இரவையுண்டர்க்க" என்னும் உரைக்கு வினைமுதல் யாது? புகை என்பதா? பகலே என்பதா? புகையென்பதாயின் பகலே என்னும் வினைமுதற்குப் பயனில்லையாது?

௭. மேற்படி இலம்பகத்திலே ௧௨௨-ம் கவியிலே "பையரவ்வினுடலும்" என்பதனுரையாகிய "அரவுபோலப் பரந்து உலாவுதலுண்டாகும்படி புடைத்தலும்" என்புழிப் "புடைத்தல்" என்பது செயப்படுபொருளுடைவினை, செயப்படுபொருளில்லாத "ஆடல்" என்பதற்குச் செயப்படுபொருளுடைய "புடைத்தல்" என்பது உரையாக அமையுமா?

௮. மேற்படி இலம்பகத்திலே ௧௫௧-ம் கவியுரையிலே "கலக்கிடனுமருமையால்" என்பதன் பொருள் யாது? அதன் புரோவாதம் ௧௨௯-ம் கவியிலே "கலக்கிடனுய்" என்று நிற்றல் என்னையோ?

௯. மேற்படி இலம்பகத்திலே ௧௬௧-ம் கவியிலே "நெஞ்சென்னுங்கிழியின் மேலிருந்திலக்கித்து" என்பதனுரை "நெஞ்சென்னும் படத்திலே குறித்து" என்பது. இலக்கித்து என்னும் வினைச்

சொல்லின் பகுதியாது? அப்பகுதி வடமொழியா? தென்மொழியா? வடமொழியாயின் அதுதான் யாது? தென்மொழியாயின் எப்பொருளில் எப்புலவராற் பிரயோகிக்கப்பட்டுள்ளது? குறித்து என்பதற்கும் அதற்கும்இயைபுண்டா? பின் "இலக்கு=குறித்துப்பார்த்தல்" என்றது எதற்கு உரையாகும்? அதற்குத்தானாயின் "குறித்து" என்றதென்னையோ?

௧௦, மேற்படி இலம்பகத்திலே க௬௯-ம் கவியிலே "அஞ்சிறைப்பறவை" என்பதற்கு "வாவல்" என்றுரை கூறியதற்குப் பிரமாணம் யாது?

இவற்றின் விடைகள் இச் 'செந்தமிழில்' வருமாயின் "செந்தமிழ்" படிப்போர்க்கும் பயன்படும்.

சதாசிவ ஐயர்.

யாழ்ப்பாணம்.

ஸ்ரீ

நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி)

~~வான் சிறப்பு~~ நீத்தார்பெருமை.

உ௬ "செயற்கரியசெய்வார்"

நு-லே. நீர்பலகான் மூழ்கன் முதலாய நாலிருவழக்கிற் றாபத பக்கமென்பாருமுளர்; அவைநியமத்துள்ளே அடங்குதலின் 'நீத்தார் பெருமைக்கேலாமையறிக' என்றார். இவ்வாறு உரைப்பதனை வடநூலார் தூடணம் என்பர்.

உ௭. "சுவையொளியூறோசை"

நு-லே. 'தெரிவான்' என்பது உடம்பொடு புணர்த்தலென்னுந் தந்திரவுத்தி. 'கட்டு' என்பது கண்ணது என ஆறுவதனுருபு முற்

றாயும்; காமத்துட் 'பேரமர்க்கட்டு' (திருக்-கO அரு) என்பது கண்ணையுடைத்தெனை இரண்டாவது விரிக்குங் குறிப்புமுற்றாயும் நின்றது. இதனுள் தத்துவவகைகாண்க.

உஅ. "நிறைமொழிமாந்தர்"

ரு-லை. அருளினும் வெகுளினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி நிறைமொழி. கண்கூடு-பிரத்தியக்ஷம். சமயக்கணக்கர் தந்திறமுரைத்தகாதையுள் (மணிமேகலை) "சாத்தரு, முண்மைப் பொருளி னுலகா யதனுணர்வு- கண்கூ டல்லது கருத்தள வழியும்" (எரு - எச) என்றதனையானும் அறிக.

உகூ. "குணமென்னுங்குன்றேறி"

ரு-லை. 'கணமென்று' (எனப்) பாடமோதாது கணமேனுமென்க. "புறங்குன்றி கண்டனைய ரேனும்" (திருக். உஎஎ.) "அரம்போலுங் கூர்மைய ரேனும்" (ஷை-கூகூஎ) "என்னுடைய ரேனு மிலர்" (நள வெண்பா) "யாதானு நாடாமால்" (ஷை-நகூஎ) "வானம் வறக்குமேல் (ஷை-கஅ) "செல்லாமை யுண்டேல்" (ஷை-ககருக) எனப் பெரும்பான்மையும் வருதலான், ஏனும் ஆனும் வேலும் என்பன ஆயின் என்னும் எச்சமாதலான் அவ்வாறே பாடமோதுக. "கிரப்பிடும்பை காலையுஞ் சாலுங் கரி" (திருக்-கOருO) என்பதுபோலக்கணமேயுங்காத்தல் என்றால், வகாரத்தொடு கூடிநின்ற உம்மையாய் அக்கணமுமெனப் பொருள்படுதலால் அது பாடமன்றென்க. குணம்-சாதியொருமை. "தென்புலத்தா"ரில் (ஷை-சரு.) "தெய்வ"மும் அது.

ருO. "அந்தணரென்போரறவோர்"

ரு-லை. செந்தண்மை-செவ்விய தண்ணளி. அந்தணர் - அழகிய தட்பத்தினையுடையார். திருமுருகாற்றுப்படையுள், 'அந்தணர்-வேதாந்தத்தை அணவினோர்' என்றார் நச்சினார்க்கினியர் எனக. "அவ்வாறனையுடையாராயினும்" என்பது "நிறைமொழிக்" குறட்பொருளைச்சுட்டியது.

அறன்வலியுறுத்தல்.

அதிகாரமுறைமைவாசகம் பயத்தலால் அவற்றின்வலியுடைத்தென்பது. அறம் - எழுவாய். சுட்டுப்பன்மை-பொருளின்பம்.

௩௧. "சிறப்பீனும்"

நு-லே.:— ஊங்கு - மிகை.

௩௨. "அறத்தினூஉங்காக்கமுமில்லை"

நு-லே:— அநுவாதங் காண்க. நாடென்ப நாடாவளத்தென' வும் (திருக்-௭௩௯) அது * "இருதிணைமருங்கினைம்பா லறிய" (தொல்-சொல். ௧௦) என்னுஞ் சூத்திரத்துள் நச்சினார்க்கினியரும் (இவ்வாறு) உரைத்தார். அநுவாதமாவது, புரோவாதமாகமுன்சொன்னவதனையே பின்னுஞ்சொல்லி ஆண்டு எஞ்சிநின்றன சில கூட்டியுரைத்தல்; இது கூறியது கூறற்குப் பரிகாரம். இன்னும் வேறு வேறு; பெயரிட்டுப் பின்வருநிலையென்னும் அலங்காரமெனவும் வலியுறுத்தலெனவும் கூறுப.

௩௭. "அறத்தாறிதுவெனவேண்டா."

நு-லே:—எனவென்னெச்சம் வினையெச்சவாய்பாடாய் முடிவது; இனி, எனவென்னும் எண்ணிடைச்சொல் பெயரெச்சவாய்பாடாய் முடியும். அஃது "அழுக்கா றெனவொரு பாவி" (திருக்-௧௬௮) "நாளென வொன்றுபோற் காட்டி" (ஷை ௩௩௪) என்பன முதலாயின. "உணரப்படும்" என்பது சொல்லெச்சம். அது "பிறவிப் பெருங்கட" லுள் (ஷை-௧௦) மறுதலைப்பொருளின்கண் நின்றது போல் ஈண்டு நில்லாமை காண்க.

௩௮. "வீழ்நாள்படாமை."

நு-லே:—ஐவகைக் குற்றத்துக்கு விவரம், அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு; இவற்றை வடநூலார் கிலேசமென்ப. இவற்றின் விரிவு "காமம் வெகுளி" (திருக்-௩௬௦) என்பதனுரையிற் காண்க.

௩௯. "அறத்தான் வருவதேயின்பம்."

நு-லே:—மற்று, அதனோடு பொருந்தாதுவருவன என்று, அறத்தான் வருமின்பத்திற்கு மறுதலைப்பொருளுரைத்தார். ஆனுருபு "செய்யாமெலிநதுப்பேம்" (திருக்-௧௪௮) என்பதுபோலக் கருவிக்கண்வாராது, அறத்தோடு பொருந்தவருவதேயின்பமென, ஒருவெ

* "இவ்வாறன்றி என்ப என்பதனைப் பின்னுங்கூட்டி இருபொருள் படவுரைப்பின் அநுவாதமாம்" என்பர் பரிமேலழகர்.

ன்னும் வாய்பாட்டான் உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இன்பம்-இம்மையின்பம். "பெண்டகையாற் பேரமர்க் கட்டு" (திருக்-கய௮௬) "தூங்கு கையா னோங்கு நடைய" என்பனவும் அவ்வாறும். "சிறப்பொடு பூசனை செல்லாது" (ஷை-க௮) என்பதனுள்ளும், 'செல்லா' தென்னும் ஒருமைவினைக்கேற்பச் 'சிறப்பொடுகூடிய பூசனை' எனக் கூடியவென்னும் ஒரு சொல்லைப்பெய்து, சிறப்பை அடையாக்கிப் பூசனையை எழுவாயாக்கினர். ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான், நாயொடு நம்பிவந்தான் என்பனவற்றிற்கும் இவ்வாறே பொருள்கொள்க. சிறப்பொடு வந்த பூசனை, ஆசிரியனொடுவந்த மாணாக்கன் என வந்தால், உடனிகழ்ச்சி யென்னும் ஒருவினையொடுச்சொல்லேயாம். "பாலொடு தேன் கலந்தற்றே"(திருக்-ககஉக) என்பது, எண்ணொடு விராய அரிசிபோல, செயப்பாட்டுவினை செய்ததுபோலக் கூறியது.* அதனொடுமயங்கலதனை அதனுட்காண்க. "மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு—தானஞ்செய் வாரிற் றலை" என்பன, தவத்தின் மேலுந்தானத்தின் மேலும் மனத்தின்மேலும் வாய்மையின் மேலும் வினையில்லாது செய்வான்வினையாய் நின்றது. "கூலொடு கழுதை பாரஞ்சுமந்ததும்" அது இனிப் "பகுதியாற் பாற்பட்டு" (ஷை-ககக)என்பது, "ஊரானோர்தேவகுலம்" என்பதுபோலத்தொறுப்பொருட்டாயும், "இன்சொலா லீரமளைஇ" (ஷை-கூக) என்பது அசைப்பொருட்டாயும் வரும். இனி "வேலொடுநின்றான்" (ஷை-ருருஉ) என்பது, கொண்டு என்னும் பொருட்டாய் வந்தது. "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்"—ஒடு, ஆலானது. இனி, "விழித்தகண் வேல்கொண் டெறிய"(ஷை-எஎரு) என்றது வேலாலெறிய எனப்பொருள்படும். "தொடியொடு தோணெகிழ" என்பது, "மலையொடு பொருதமால் யானை" என்பதுபோல வேறு வினைக்கண்வந்தது. "தூய்மை" (என்பத) னுள் (ஷை-கூ௮௮) இம்மூன்றின் வாய்மை—இம்மூன்றொடுகூடிய வாய்மை-என இன் ஒடுவின் பொருட்கண் வந்தது. "அழிவந்த செய்யினும்" (ஷை-௮௦எ) என்பதனுள் "அன்பின் வழிவந்த கேண்மை" "பழமது. அறம்பொருளின்பமென இன்பம் தனியே ஒன்றாதலால், இதற்கது கருவியன்று."

(தொடரும்.) பத்திராசிரியர்.

* "கலந்ததற்று என்பது விகாரமாயிற்று; கலக்கப்பட்டதென்றவாறு" என்றார் பரிமேலழகர்.

உ

சிவமயம்.

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

முற்றொடர்ச்சி.

பிலநீங்குபடலம்.

நன்புல னடைக்குற வுணர்வு நாமறப்
பொன்பொலி யாக்கைகள் புழுங்கிப் பொங்குவார்
தென்புலத் தங்கெரி நரகிற் சிந்திய
வென்பில்பல் லுயிரென வெம்மை யெய்தினார்.

என்னும் உ௯-ம் செய்யுளில், 'நன்புலனடைக்குறவுணர்வு நாமறப்-பொன்பொலியாக்கைகள் புழுங்கிப்பொங்குவார்—தென்புலத்தங்கெரி நரகிற்சிந்திய' என்பது 'நன்புலனடைக்குற நாவுநீரறப்-புன்புலையாக்கைகள் புழுங்கிப் பொங்குவர் - தென்புலத்தவரெனநரகிற் சிந்தியா' எனக்காணப்படுகின்றது. புலனடைக்குறல் முதலியன நரகில் வருந்துவார்க்கு முளவாதலின் 'தென்புலத்தவரென' என்பதும், இவைகள் தமக்குளவாதலின் நரகைப்போல அச்சுரத்தைக்கருதினாராதலின் 'நரகிற் சிந்தியா' என்பதும் பொருத்தமுடையவாதல் காண்க. தென்புலத்தவரென அடைக்குறவும் நீரறவும் புழுங்கிப் பொங்குவார் சிந்தியா வெம்மை யெய்தினார் என்க. வெயிலின்வெம்மையை அடைந்த என்பில் பல்லுயிர்கள் எவ்வளவு வருத்தமடையுமோ அதுபோல இவர்களும் அச்சுரவெம்மையை யடைந்து அவ்வளவு வருத்தமடைந்தார்கள் என்பதாம். என்பிலதனை 'வெயில்போலக்காயுமே—யன்பிலதனை யறம்' என்றார் திருவள்ளுவனாரும்.

௩௰.

இந்திர நகரமு நிகரி லாதது
மந்திர மணியினிற் பொன்னின் மண்ணினி
லந்தரத் திழிசுட ரவையி னாயினு
முந்தரு விருபொற் றொளிர நின்றது.

என்னும் ௩௰-ம் செய்யுளில், 'இந்திரநகரமு நிகரிலாதது—மந்திரமணியினிற் பொன்னின் மண்ணினி - லந்தரத்திழிசுடரவையின்

*

றுயினும்' என்பது 'இந்திரநகரமு நிகரிலாதது - மந்திரமணியினிற் பொன்னின் மன்னியே - யந்தரநிமிர்சுடரங்கின்றுயினும்' எனக்காணப் படுகின்றது. 'மண்ணினில்' என்பதும், 'அவை' என்பதும் பொருத்தமில்லன வாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. அந்தரநிமிர்சுடர் - சூரியன். அங்கு - பிலம்.

வேறு

வாவியுள பொய்கையுள வாசமண நாறுங்
காவுமுள காவிவிழி யார்மொழிக ளென்னக்
கூவுமிள மென்குயில்கள் பூவைகிளி கோலத்
தூவிமட வன்னமுள தோகையர்க ளில்லை.

என்னும் ௭௦-ம் செய்யுளில், 'தோகையர்களில்லை' என்பது, 'தோகைசுவடில்லை' எனக்காணப் படுகின்றது. குயில்களும், பூவைகளும், கிளிகளும், அன்னங்களும் உள்ளன. தோகையினது சுவடு மாத்திரம் அங்கே காணப்படவில்லை. என்னும் பொருள்வைப்புச் சிறந்து காட்டலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. தோகை மயிலையும் சீதையையும் குறித்துநின்றது.

வேறு

இறந்தில மிதற்குரிய தெண்ணியில மேது
வறிந்தில மயிர்ப்பிறெ டிமைப்புள துறக்கம்
பிறந்தவர் செயற்குரிய செய்தல் பிழையின்றுற்
றிறந்தெரிவ தென்னென விசைத்தனர் திகைத்தார்.

என்னும் ௭௨-ம் செய்யுளில், 'ஏது - வறிந்தில மயிர்ப்பிறெடிமைப்புள துறக்கம்—பிறந்தவர் செயற்குரிய செய்தல் பிழையின்றுற் றிறந்தெரிவ தென்னென விசைத்தனர் திகைத்தார்' என்பது, 'ஏது—மறந்தில மனத்துயரம் விட்டிலம் வருத்தம்—துறந்திலம்வியப்பிறெடிமைப்புளதுறக்கத்—திறந் தருவதென்னென விசைத்தனர் திகைத்தார்' எனக்காணப்படுகின்றது. துறக்கம் புக்கார்க்கில்லாகிய இக்குணங்கள் நமக்குளவாகவும் துறக்கத்தின்றன்மையைக் காட்டுவது என்னை என்னும் பொருடங்து சிறந்து நிற்றலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. வருத்தம் - மெய்வருத்தம் முன்னையபாடத்தில் மூன்றுமடி சிறிதும் பொருத்தமின்மை காண்க.

ஷை.

அடங்கவும் வல்லீர் காலமதன்றே லமர்வந்தான்
மடங்கன் முனிந்தா லன்ன வலத்தீர் மதிநாடித்
தொடங்கிய தொன்று முற்றுமுடிக்குந் தொழிலல்லா
லிடம்பட வெவ்வா யூறுகிடைத்தா லிடையாதீர்.

என்னும் கஎ-ம் செய்யுளில், 'மடங்கன் முனிந்தாலன்ன வலத்தீர் மதிநாடித்—தொடங்கிய தொன்றே முற்று முடிக்குந் தொழிலல்லா—லிடம்பட வெவ்வாயூறு கிடைத்தாலிடையாதீர்' என்பது, 'மடங்கன் முனிந்தாலென்ன மலைப்பீர் மதிநாடித்—தொடங்கியதொன்றே முற்றுமுடிக்குந் தொழில்வல்லீ—ரிடங்கெடவல்லே யூறுகிடைத்தாலிடையாதீர்' எனக்காணப்படுகின்றது. 'முனிந்தாலன்ன வலத்தீர்' என்பது பொருத்தமின்றாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. முனிதல்—பொருதல்;காரியகாரண உபசாரம். பின்னடிகளிற்பாடங்களும் பொருத்தமுடையவாதல் காண்க.

ஐந்தாவது.

சுந்தரகாண்டம்.

கடறாவுபடலம்.

மாவொடு மானுங் கல்லும் வல்லியும் யாவு மற்றும்
போவது புரிந்த வீரன் விசையினாற் புணரி பொங்கத்
தூவின கீழு மேலுந் தூர்த்தன சுருதி யன்ன
சேவகன் சீறு முன்னஞ் சேதுவுந் தெரிந்த மாதோ.

என்னும் உ0-ம் செய்யுளில், 'சுருதியன்ன' என்பது 'சுடுதீயென்ன' எனக் காணப்படுகின்றது. சுடுதீயென்னச் சீறுமுன் எனமுடிந்து பொருள்சிறத்தலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை.

கொட்புறு புரவித் தெய்வக் கூர்நுதிக் குலிசத் தாற்குங்
கட்புலங் கதுவலாகா வேகத்தாற் கடலு மண்ணு

முட்பதங் கூட்டி யண்ட முறவுள செலவி ஞெற்றைப்
புட்பக விமானந் தானவ் விலங்கைமேற் போவ தொத்த.

என்னும் ௨௪-ம் செய்யுளில், 'உட்பதங்கூட்டி யண்டமுறவுள செலவிஞெற்றைப்—புட்பக விமானந்தானவ்விலங்கை மேற்போவ தொத்த' என்பது 'உட்படக்குலவுமண்டகோடி போமரக்கஞெற்றைப் - புட்பகவிமானந்தானவ் விலங்கைமேற்போவ தொத்தான்,' எனக் காணப்படுகின்றது. முன்னையதினும் பின்னையதுசிறப்புடையதாதல் காண்க. கடலும் மண்ணும் உட்பதங்கூட்டி' என்பது சிறப்பின்மைகாண்க. இன்னும் (வேகத்தாற் கடலுமண்ணும்) என்பதை (வேகத்தான் கடலுமண்ணும்) எனப்பாடங்கொள்க. வேகத்தான் ஒத்தான்என்க.

வேறு

மழைகிழித்துதிர மீன்கண் மறிகடல் பாயவானங்
குழைவுறத் திசைகள் கீற மேருவுங் குலுங்கக் கோட்டின்
முழையுடைக் கிரிகண் முற்ற முடுக்குவான் முடிவு காலத்
தழிவுறக் கடுக்கும் வேகத் தாதையு மனையனுனன்.

என்னும் ௨௮-ம் செய்யுளில், 'முடுக்குவான்' என்பது 'முடுகுவான்' எனவும் 'கடுக்கும' ஏன்பது 'கடுகும்' எனவும் காணப்படுகின்றன, முன்னைய விரண்டும் பிறவினையாதலிற் பின்னையவே பொருத்தமுடையன. முடுகுதல், கடுகுதல் என்னும் இரண்டும் விரைந்து சேறற்பொருளன.

ஊர்தேடுபடலம்

பஞ்சி யூட்டிய பாட்டிசைக் கிண்கிணிப் பதுமச்
செஞ்செவிச் செழும் பவளத்தின் கொழுஞ்சுடர் சிதறி
மஞ்சி னஞ்சன நிறமறைத் தரக்கியர் வடித்த
அஞ்சி லோதியோ டுவமைய வவர்க்குறு முவமை.

என்னும் ௪-ம் செய்யுளில், 'அஞ்சிலோதியோடுவமையவவர்க்குறுமுவமை' என்பது 'அஞ்சிலோதியோடுவமையகாய்ப்புறமமைவ' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட்பொருத்தமின்மையானும், பின்னையது மாடங்களுக்கு விசேடணமாய் பின்னும்முன்னும்உள்ள செய்யுள்கள்போல வினைமுற்றாய் நிற்றலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. 'அவர்க்குறுமுவமை' என்பதுபொருட்பொ

ருத்தமில்லாது நிற்றல்காண்க. முகில்கள்பவளக்கொழுஞ்சுடர்சிதறப்பட்டுத் தங்கள் கரியநிறத்தை மறைத்து அரக்கியர் கூந்தலோடுவமையவாய் மேலிடத்தேபொருந்தப்படுவனவெனப்பொருள்கொள்க. இப்பொருட்கு 'மஞ்சினஞ்செறிநிறமறைத்து' எனப்பாடங்கொள்க. முன்னையபாடத் தின்படிமஞ்சினஞ்சனநிறமறைத்து'எனக்கொள்ளின்மாடம் எழுவாயாய் நிற்கும், என்க அதுசிறப்பின்று. அரக்கியர் ஓதி, செம்மைநிறம் உடையதாதலின் இங்ஙனம் கூறினாரென்க.

சி. கணேசையர்

௨

தனிச்செய்யுட்கோவை.

———:o:———

[தமிழ்நாவலர் சரிதையினின்று எடுக்கப்பட்டவை.]

ஒட்டக்கூத்தன் என்று ஒரு புலவன்வரக் கேட்டுச் சொல்லியது.

பறியாரோ நின்வாயிற் பல்லதனைப் பாவோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளைச்—சிறுகவொரு
மட்டப்பேர் போதாதோ வாக்கிதுவே யானக்கால்
ஒட்டக்கூத் தன்றா னுனக்கு.

(தத்துவப்பிரகாசர்) உலோபரைப் பாடியவை.

குரங்குமாய் நண்டுகெட்டித் தேளுங் கொட்டிக் குடியாத மதுக்குடித்துப் பேயுமேறி - யிரங்கவருங் காஞ்சிரத்தின் பொடியுந் தூவி யிஞ்சிதின்று கொள்ளிபிடித் தெழுந்தாற் போலத் - தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்விற் றண்டிகையி லேயேறிச் சம்பத் தேறிக் - கருங்கைமதக் களிறேறிக் கழுவிலேறிக் காடேறி நாடேறித் திரிவார் சண்டர்.

பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்பசாசறைந்தா லதிட்டுப் பார்க்க வல்லோம் - வேம்புகசப் பறக்கறியு மாக்கவல்லோம் விறல்வேழத் ததிகமதந் தணிக்கவல்லோம்—சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம் தரணியின்மேற் கல்லாத தொன்றுமில்லைத்-தீம்பரைநல் லவராக்கிக் குணமுண் டாக்கத் திறமறியா தேநின்று திகைக்கின் றேமே.

தத்துவப்பிரகாச பண்டாரத்துக்கு இலக்கணம் வருமோ என்றபோது (அவர்) பாடியது.

கவடிகளா கத்திரியுங் கள்ளர்கா ணன்னூற்
சுவடியிருந் தாவதென்ன சொல்வீர்—குவலயத்துக்
காட்டுக் கெறித்தநிலாக் கண்ணிரண்டு மில்லாதான்
வீட்டுக் கெறித்த விளக்கு.

காளமேகப்புலவர்.

தூதைந்து நாழிகையி லாறுநா ழிகையினிற்
பலசந்த மாலைசொலவுஞ்
சூழுலா வந்தாதி யேழுநா ழிகையினிற்
றொகைபெற வகுத்தோர்தவும்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகையினிற்
பரணியொரு நாண்முழுதுநீள்
பாரகா வியமுற்று மீரிரு தினத்தினிற்
பகரக் கொடிக்கட்டினேன்
சீதஞ்செ யுந்தொங்கன் மார்பினு ணியமலிசை
தெரிந்ததிரு மலைராயன்முன்
சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வருந்
திருட்டுக் கவிப்புலவரைக்
காதும் பிடித்துக் கவித்துக் கதுப்பிற்
காத்திட் டடித்து முதுகிற்
கலணைவைத் தேழுகக் கடிவாள மிட்டேறு
கவிகாள மேக நானே.

ஞானவரோதயர் மதுரைக்குப்போன போது (காளமேகம்) எழுதியனுப்பிய கவி.

மூதிரத் தமிழ்தெரி கின்பாட றன்னை முறையறிந்தே
வதிரொக்கக் கோப்பதற் கேழுழு பேரில்லை யின்றமிழின்
பதரைத் தெரியக் கோவில்லை யேறப் பலகையில்லை
மதுரைக்கு நீசென்ற தெவ்வாறு ஞானவரோதயனே.

பரிசிற்பெற்றுக் கிராமப்பிரதக்ஷிணம் வரும் புலவன் உப்பரிகை மேற்பார்த்த ஒருத்தியைக்கண்டு விரகமாய்ப் பாடியது.

என்னெஞ்சு மென்விழியுங் கொண்டோ விலங்கேசன்
பொன்னஞ் சிகாமணியும் பொன்முடியும்—வன்னெஞ்சுஞ்
சிந்துங் கொடைச்சிவந்தான் றென்கோடை யார்கழங்கும்
பந்துஞ்சா தித்த படி.

கண்டு பணியக் கடவேனோ காதலுடன்
தொண்டை யிதழருந்தித் தோய்வேனோ—கொண்டற்
கொடைச்சிவந்தான் கோடைக் குளிர்காவி லன்ன
நடைச்சிவந்தா ளென்செய்வே னான்.

[இந்தக்கவியை ஓர்புறனாய் மழவராயன் கேட்டிருந்து வரைந்துகொண்டு அவளை (அப்புலவர்க்குக்) கொடுத்தான்.]

திருக்கண்ணபுரத்துத் தாசி முனையதரையனுக்கு எழுதி விடுத்த பாட்டு.

இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு
நின்றுவரி லன்னதுவு நீயறிவை—வென்றி
முனையா கலவி முயங்கியநா ளெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ.

குருநமச்சிவாயதேசிகர்.

அத்தி முதலெறும்பீ றானகடை யத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
எரிக்குதையா காரோண ரே.

(இதுகேட்டுக்) காரோணர் அமுதுகொடுத்தார்.

சோழன்புலவன், பாண்டியன் போரிற் புறந்தந்தோடுவது கண்டு கூறியது.

மான பரணபயன் வந்தா னெனவழுதி
போனவழி யாரேனும் போவரோ—ஆனைச்